பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 11 செவ்வாய்க்கிழமை 27.10.2020 கதிர் 352

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ்க் கட்சிகளை ஒன்றுபடுத்தும் முயற்சியில் மிகவும் முனைப்பாகவும் உறுதியாகவும் இருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா எனத் தெரிகின்றது.

ஏற்கனவே, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் பக்கம்02 »

# நடமாட்டத்தை தடுக்காவிடின் தொற்றுக் கட்டுமீறும் ஆபத்து!

### தொற்றுநோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 27

கொரோனா தொற்று நாட்டிற்குள் பரவும் வேகம் முன்னரை விட அதிகளவில் காணப்படுவதாக தொற்றுநோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

பொது மக்களின் நடமாட்டம் வரையறுக்கப்படாவிட்டால் எதிர்வரும் சில நாள்களில் நோய்த் தொற்றுப் பரவும் நிலை கட்டுப்பாட்டை மீறி செல்லக்கூடிய நிலை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். பக்கம் 02 »



# விமானப்படைத் தளபதி ஓய்வுடன் கனடாவுக்கான தூதராக நியமனம்

விரைவில் ஓய்வுபெறவுள்ள விமானப்படைத் தளபதி எயர் மார்ல்சுமங்கலடயஸ், கனடாவுக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளார். இவருடன் மேலும் எட்டு நாடுகளுக்கான தூதுவர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

நைஜீரியாவுக்கான தூதுவராக சாதிக், சவூதி அரேபியாவுக்கான தூதுவராக பக்கம் 11 »



# பாஷையூர்ப் பகுதியை உடன் முடக்க சிபார்சு

## குருநகரை ஒட்டி இருவருக்குக் கொரோனாத் தொற்று போலியகொட மீன் சந்தைக்குச் சென்று திரும்பியவர்கள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர் 27

யாழ்ப்பாணம், குருநகரை ஒட்டிய பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றாளிகள் இருவர் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து யாழ்ப்பாணம் கிராமசேவகர் பிரிவுகளான ஜே.65(பாஷையூர் மேற்கு), ஜே.67 (திருநகர்) ஆகியவற்றை உடனடியாக முடக்கத்துக்கு (லொக்டவுனிற்கு) உட்படுத்துமாறு சுகாதார திணைக்களம் அது தொடர்பாகத் தீர்மானம் எடுக்க வேண்டிய கொரோனாத் தடுப்புச் செயலணியிடம் நேற்று இரவு கோரிக்கை விடுத்துள்ளதாக நம்பகரமாக அறியவந்தது. பக்கம் 02 »

## கொழும்புப் பகுதியில் உடல் சூட்டை அளக்கும் மோ.சைக்கிள் அணி

இலங்கையில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, இராணுவத்தின் விசேட மோட்டார் சைக்கிள் படையணிகுழுவினர்கொழும்பு நகர எல்லைக்குள் மக்களின் உடல் வெப்பநிலையை அளவிடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பக்கம் 11 »

## முழு நாட்டையும் முடக்க வேண்டிய தேவை இல்லை

### ஆளுந்தரப்பு தெரிவிப்பு

கொரோனா வைரஸ் தாக்கத்தால் முழு நாட்டுக்கும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை கிடையாது. பொருளாதாரத்துக்கும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பாதிப்பு ஏற்படாத விதத்தில் அரசு பக்கம் 11 »

# மைக் பொம்பியோவின் விஜயத்தால் பேராபத்து

### தேசிய புத்திஜீவிகள் அமைப்புப் புலம்பல்

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்று இலங்கை வரவுள்ள நிலையில் அவரது விஜயம் நாட்டுக்குப் பேராபத்தானது என தேசிய புத்திஜீவிகள் அமைப்பு எச்சரித்துள்ளது.

எதிர்காலத்தில் பக்கம் 02 »



# கரவெட்டி பிரதேச சபையின் தவிசாளர் ஐங்கரன் டிசெம்பர் முதலாம் திகதியுடன் பதவி துறக்கிறார்

### சபையில் தமிழரசு உள்முரண்பாட்டுக்குத் தீர்வாக

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக். 27

கரவெட்டி (வடமராட்சி தெற்கு, மேற்கு) பிரதேச சபையின் தவிசாளர், தங்கவேலாயுதம் ஐங்கரன் டிசெம்பர் முதலாம் திகதி பதவியிலிருந்து விலகுகிறார் என எழுத்தில் அறிவித்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைமைக்கும் யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கும் இது தொடர்பில் கடிதம் மூலம் தாம் பக்கம் 02 »



# இலங்கைக்குத் தேவையற்ற சிக்கல்களைக் கொண்டுவர வேண்டாம்! மைக் பொம்பியோ விஜயத்தை முன்னிட்டு சீனா காட்டமான அறிக்கை




இலங்கைக்கு தேவையற்ற பிரச்சினைகளைக் கொண்டு வர வேண்டாம் என அமெரிக்க இராஜாங்க செயலர் மைக் பொம்பியோவின் விஜயத்தை முன்னிட்டு இலங்கைக்கான சீனத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை பின்வருமாறு: -

அமெரிக்க முதன்மை பிரதி உதவி இராஜாங்க செயலர் டீன் தொம்ஸன் இராஜாங்க செயலாளரின் எதிர்வரும் விஜயம் தொடர்பாக நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் சீனா – இலங்கை உறவு தொடர்பாக பகிரங்கமாக வலியுறுத்தல் விடுத்தமையுடன் தலையீடு செய்தமை மட்டுமன்றி வெளிநாட்டு உறவுகள் தொடர்பாக 'கடினமானதும் ஆனால் தேவையானதுமான தீர்மானங்களை' இலங்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரியிருந்தமையானது இராஜதந்திர நெறிமுறைகளை அப்பட்டமாக மீறுவதாகும்.

அடுத்த நாள், சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் கடுமையாக பதிலளித்து, அமெரிக்க அதிகாரியின் கருத்துக்கள் பனிப்போர் மனநிலையால் நிரம்பியுள்ளன என்றும், மேலாதிக்க பக்கம் 11 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனைத் தேடிச் சென்று சந்தித்துப் பேசி நல்லுறவைப் பலப்படுத்திக் கொண்ட மாவையர், இப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரனைத் தேடிச் சென்று சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்புகள் தொடர்பில் ஒரு விடயத்தை என்னால் நன்கு அறிந்து கொள்ள முடிந்தது.

அது – நீதியரசர் விக்னேஸ்வரனுக்கும் மாவைக்கும், சுரேஷ் பிறேமச்சந்திரனுக்கும் மாவைக்கும் இடையில் 'கெமிஸ்ட்ரி' நன்றாக வேலை செய்யத் தொடங்கியிருக்கின்றது என்பதுதான்.

எப்பாடுபட்டாவது புதிய கட்டமைப்பை உறுதிப்படுத்தி, நிலைநிறுத்தி விட வேண்டும் என்பதில் இந்த மூவருடன் தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் சட்டத்தரணி என்.சிறீகாந்தாவும் மிகவும் உறுதியாக இருக்கின்றார்.

ஆனால் –

இந்த முயற்சிக்கு கூட்டமைப்பின் பிற பங்காளிக் கட்சிகளிடமிருந்து இன்னமும் பச்சைக் கொடி காட்டப்படவில்லை. கூட்டமைப்புக்குள் சில தரப்புகள் சிவப்புக் கொடி காட்ட ஆயத்தமாக இருக்கின்றன என்றும் கேள்வி.

ரெலோவில் இப்போது கொடி கட்டிப் பறக்கும் பிரமுகர்கள் இந்தப் புதிய கூட்டு முயற்சியை ஆரோக்கியமானதாகப் பார்க்கவில்லை.

புளொட் வழமை போல மதில் மேல் பூனை நிலைமை என்றாலும், புதிய கூட்டு அமைக்கும் முயற்சியை எதிர்க்கும் பக்கத்திற்கு பாயத் தயாராக இருப்பதாகத் தகவல்.

வவுனியாவில் ஒரு தமிழ் அரசியல் பிரமுகரின் செத்த வீட்டில் சந்தித்த ரெலோ, புளொட் மற்றும் சில கட்சிகளின் பிரமுகர்கள் மத்தியில் இந்த முயற்சியைக் குறை சொல்லும் விதத்தில் ரெலோவினர், புளொட்டினர் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்தனர் என்று தெரிகின்றது.

ஆனாலும், புதிய கூட்டு அமைக்கும் நாடகம் எந்த மழை அடித்தாலும், புயல் வீசினாலும் தொடர்ந்து நடக்கும் என்பதில் மாவை மிக மிக உறுதியாக இருக்கின்றார் எனத் தெரிகின்றது.

மாவைக்குப் பக்கத்தில் இருந்தபடி, மாவைக்கு முட்டுக்கட்டை போடும் தரப்புகளைத் தாமே அழைத்துப் பேசி சமாளிப்பதற்கு நீதியரசர் விக்னேஸ்வரன் தயார். அந்தளவுக்கு மாவை – விக்கி புரிந்துணர்வு மலர்ந்திருக்கின்றது.

இந்த முயற்சிக்கு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் ஆதரவு கிட்டவேயில்லை என்பது மிகமிக உறுதி. இந்த முயற்சி தொடர்பில் சம்பந்தனின் நிலைப்பாடு வேறு விதத்தில் அமைந்துள்ளது.

*புதிதாகக் கூட்டுப் சேர முயலும் எல்லோரும் – விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், சிறிகாந்தா, சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், அருந்தவபாலன், ஐங்கரநேசன் போன்றோரும், இன்னும் கூட்டு முயற்சிக்குள் வராத கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் போன்றவர்களும் – ஒரே இடத்தில் இருந்து போனவர்கள்தாம்.*

*அது – தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான்.*

*ஒற்றுமையாவது என்றால், பிரிந்து போனவர்கள் மீண்டும் கூட்டமைப்பில் வந்து சேர்ந்து இயங்குவதுதானே. அதற்கு ஏன் புதிய கூட்டு அமைக்கும் முயற்சி?*

– இதுதான் சம்பந்தனின் நிலைப்பாடாம். ஆனாலும் இதுவரை அவர் தமது கருத்தை மாவை சேனாதிராசாவுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை.

ஆனால், சம்பந்தன் இத்தகைய நிலைப்பாட்டைத் தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளார் என்பதை மாவை சேனாதிராசா அறிந்துள்ளார். ஆனால் சம்பந்தனின் நிலைப்பாடு என்னவாக இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் தமது முயற்சியில் – புதிய கூட்டு அணியை உருவாக்கும் தம் எத்தனத்தில் – மாவை கருமமே கண்ணாக இருக்கின்றார் என்பது உறுதியாகத் தெரிகின்றது.

மாவையின் இந்த முயற்சி தொடர்பில் சம்பந்தனின் நிலைப்பாட்டை அறிந்த – இவ்விடயங்களில் அதிகம் பரிச்சயமுள்ள – ஓர் அவதானி ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

*"தந்தை செல்வாவும் அவரது சகாக்களும் கூட அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸில் இருந்தவர்கள்தான். பிரிந்து சென்றுதான் தமிழரசைத் தொடங்கினார்கள். பின்னர் காலத்தின் கட்டாயம் கருதி தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டிய தேவை எழுந்த போது தந்தை செல்வா தாமே நேரடியாக ஜீ.ஜீ.பொன்னம்பலத்தைத் தேடிச் சென்றார். அப்போது ஜீ.ஜீ. 'நீங்கள் எல்லோரும் தமிழ்க் காங்கிரஸில் இருந்துதானே பிரிந்து சென்றீர்கள். இப்போது ஒன்றிணைவதானால் காங்கிரஸ்க்கு மீளத் திரும்புவதுதானே...!' – என்று கேட்கவில்லையே. அவரும் சேர்ந்துதானே தமிழர் கூட்டணியைத்தொடங்கினார். சம்பந்தன் மட்டும் ஏன் அப்படித் தடுக்குப் போடுகின்றார்?*

*"இந்த தள்ளாத வயதில் தமிழர்களை ஒற்றுமைப்படுத்தி கடைசிக் காலத்திலாவது தனது இனத்துக்கு திருப்தி தரும் வகையில் செயலாற்றுவதன்றி அவர் ஏன் இப்படி நடந்து கொள்கின்றார்?"* – என்று விசனித்தார் அந்த அவதானி.

இதற்கிடையில் –

தமிழ்க் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி பேச்சு நடத்தும் விவகாரம் சாத்தியமற்றுத் தள்ளிப் போகின்றது – பிள்ளையார் கல்யாணம் போல நாளை, நாளை என்று.

கானல் நீராக அந்தச் சந்திப்பு விலகிப் போவதற்கான காரணம் என்ன வென்று துளாவினேன். புதிய துப்பு ஒன்று – தகவல் ஒன்று – கிடைத்தது. நாளைக்கு இடையில் அதை விசாரித்து, உறுதிப்படுத்தி வாசகர்களுக்குத் தருவேன். அதுவரை பொறுத்து இருக்குக.

– மின்னல் –

## மைக் பொம்பியோவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாருடன் முன்னோக்கிச்செல்லவேண்டும் என்பதை இலங்கை தீர்மானிக்க வேண்டும் என்று அமெரிக்கா விடுத்துள்ள கோரிக்கை எதிர்காலம் தொடர்பாக பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது .

இதேவேளை, அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக்பொம்பியோ விடுக்கவுள்ள வேண்டுகோளை இலங்கையின் அரச தலைவர்கள் பணிவுடன் நிராகரிப்பார்கள் என வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியை மேற்கோள்காட்டி 'நியூஸ் இன் ஏசியா' செய்தி வெளியிட்டுள்ளது.

'நியூஸ் இன் ஏசியா' மேலும் தெரிவித்துள்ளதாவது:–

28ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இலங்கை தலைவர்களிடம் முகத்திற்கு நேரே சீனாவுடனான உறவுகள் குறித்து மீள்பரிசீலனை செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கவுள்ளார்.

அமெரிக்கா முன்வைக்கின்ற சாத்தியப்பாடுகளை பரிசீலிக்குமாறும் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பில் அமெரிக்கா முன்வைக்கின்ற ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளுமாறும் மைக் பொம்பியோ இலங்கை தலைவர்களை கேட்டுக்கொள்ளவுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியும் பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் இலங்கையின் தீர்மானங்களும் கொள்கைகளும் மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையிலும், சட்டம் மற்றும் அரசமைப்பு நாட்டின் நலன்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் அமைந்துள்ளன என மைக் பொம்பியோவிடம் தெரிவிக்கவுள்ளனர்.

அதேவேளை, உலகிலும் பிராந்திய அளவிலும் இலங்கை அனைத்து நாடுகளுடனும் நட்புறவை பேணும் எனவும் அவர்கள் மைக் பொம்பியோவிடம் தெரிவிக்கவுள்ளனர்.

இலங்கையை எப்படி ஆட்சிசெய்ய வேண்டும் என்பதை வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்க வேண்டியதில்லை என இலங்கையின் அரச தலைவர்கள் பணிவுடன் மைக் பொம்பியோவுக்குத் தெரிவிக்கவுள்ளனர் என வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் சீனாவின் நிதியுதவியுடனான திட்டங்களை முன்னெடுக்க வேண்டாம் என இலங்கையைக் கேட்டுக்கொள்ளவுள்ள மைக் பொம்பியோ இரு தரப்பு இணக்கத்துடனான திட்டங்களை முன்னெடுப்பதற்கு வேறு எந்த நாட்டையோ அல்லது ஸ்தாபனத்தையோ முன்னெடுக்குமாறு இலங்கையை கேட்டுக்கொள்ளவுள்ளார்.

480 மில்லியன் டொலர் எம்.சி.சி. உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறும் மைக் பொம்பியோ இலங்கையின் அரச தலைவர்களைக் கேட்டுகொள்ளவுள்ளார்.

எம்.சி.சி. உடன்படிக்கையை இலங்கை முற்றாக நிராகரிக்கவேண்டும் அல்லது மறு ஆய்வுக்கு உட்படுத்தவேண்டும் என இலங்கை ஜனாதிபதி நியமித்த ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

சோபா உடன்படிக்கை இலங்கையின் அரசமைப்புக்கும் சட்டங்களுக்கும் முரணானது என்பதால் சர்ச்சைக்குரிய சோபா உடன்படிக்கை குறித்து ஆராயப்போவதில்லை என வெளிவிவகார அமைச்சகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு எதிராகக் கூட்டணியான குவாட்டுக்குள் இலங்கையை உள்வாங்குவதற்கான முயற்சிகள் குறித்து கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி, 30 வருட போரிலிருந்து சமீபத்திலேயே விடுதலையாகியுள்ள இலங்கை, இன்னொரு சர்வதேச மோதலின் களமாக மாறுவதை விரும்பவில்லை என மைக் பொம்பியோவிடம் நாங்கள் தெரிவிப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்திலும் ஏனைய பகுதிகளும் சுதந்திரமான நடமாட்டம் உறுதி செய்யப்படுவதை இலங்கை ஏற்றுக்கொள்கின்றது என அமெரிக்க இராஜாங்க செயலாளரிடம் இலங்கைத் தலைவர்கள் தெரிவிப்பார்கள் எனவும் குறித்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் முதலீடுகளை இலங்கை ஏற்றுக்கொள்ளக்கூடாது என அமெரிக்கா வேண்டுகோள் விடுக்கவுள்ளது என்பது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சக அதிகாரி அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளும் இலங்கையில் முதலீடுவது வரவேற்கப்படுகின்றது. அமெரிக்கா. சீனாவின் முதலீடுகளின் அளவுக்கு முதலீடு செய்யுமென்றால் அதனை வரவேற்போம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கரவெட்டி பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்களிற்கு இடையில் நிலவும் பிரச்சினைகள் தீர்க்கப்படாதமையால் அந்தப் பதவியில் நீடிக்கத் தாம் விரும்பவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கரவெட்டிப் பிரதேச சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை தமிழ் அரசுக் கட்சியின் தலைமையகத்துக்கு அழைத்து, அவர்களுடன் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா கலந்துரையாடினார்.

கரவெட்டிப் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை எதிர்க்கப் போகிறார்கள் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இருவர் உறுதியாகத் தெரிவித்தனர்.

எனினும் வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு அனைத்து உறுப்பினர்களிடம் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் வலியுறுத்தினார்.

நெருக்கடிக்குத் தீர்வாக வரவு – செலவுத் திட்டம் வெற்றி பெற்றதன் பின்னர் ஒரு மாதத்தில் பதவி விலகுவார் எனக் கட்சித் தலைவரிடம் கூறியிருந்த கரவெட்டி பிரதேச சபையின் தவிசாளர் தங்கவேலாயுதம் ஐங்கரன் அதன் பிரகாரம் டிசம்பர் முதலாம் திகதி இடப்பட்ட பதவி விலகல் கடிதத்தையும் சமர்ப்பித்துள்ளார்.

2021ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்டத்தை நிறைவேற்றி சபையின் அடுத்த ஆண்டுச் செயல்பாட்டிற்கு வழி ஏற்படுத்திய பின்னர் பதவி விலகுவது என்பதில் தாம் திடமாக இருக்கிறார் என்றார் அவர்.

கரவெட்டி பிரதேச சபையில் மொத்தம் 31 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் 9 பேர் மட்டுமே உள்ளனர். அதேநேரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியன சார்பில் தலா 7 பேர் உள்ளனர். அத்தோடு ஐ.தே.கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பிலும் உறுப்பினர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நடமாட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா வைரஸ் தொற்று பரவல் இதே வகையில் தொடர்ந்தும் அதிகரித்தால் நாடு கொரோனா தொற்றின் அனர்த்த அனுபவங்களை எதிர் கொள்ளவேண்டியிருக்கும் என்றும் அவர் கூறினார்.

ஒக்டோபர் 04 ஆம் திகதி முதல் நோய் தொற்று தொடர்பில் நாம் புதிய அனுபவங்களை காணுகின்றோம். நோய் தொற்றாளர்களில் காணப்படும் வைரஸ்களின் அளவு அதிகரித்திருக்கிறது. முன்னைய நாள்களிலும் பார்க்க வைரஸ் பரவும் வேகம் அதிகளவில் இருப்பதை நாம் காணக் கூடியதாக உள்ளது.

வைரஸ் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு பரவும் வேகம் அதிகளவில் காணப்படுகிறது. பொது மக்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். தற்போது மக்களின் நடமாட்டம் குறிப்பிட்ட அளவு காணப்படுகின்றது.

நாட்டில் சில பிரதேசங்களில் மாத்திரமே ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் ஏனைய பிரதேசங்களில் பெரும் எண்ணிக்கையில் நடமாடுகின்றனர். சமூகத்தில் மத்தியிலும் நடமாடுகின்றனர். மக்களுக்கிடையிலான தொடர்பும் அதிகம். இவ்வாறான செயற்பாடுகள் நோய் தொற்றுப் பரவலுக்கு வசதியான சந்தர்ப்பமாக அமையும். – என்றும் விசேட வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டினார்.

பொது மக்களின் இவ்வாறான செயற்பாடுகளினால் அரசாங்கத்தினாலும், சுகாதார பிரிவினர்களினாலும் இதனை கட்டுப்படுத்துவது சிரமமாக அமையும். நோய் பரவலை கட்டுப்படுத்தாவிட்டால் முதியோர்கள் மற்றும் தொற்றா நோய் உள்ளோர்களையும் எளிதில் தாக்கக்கூடும். சமீப கால பகுதியில் திருமண வைபவங்கள், மரண வீடுகளில் மக்கள் கூடுவதை காணக்கூடியதாக உள்ளது. இது தவிர்க்கப்பட வேண்டியதாகவும் தொற்று நோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர மேலும் தெரிவித்தார்.

(மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்...)

## பாஷையூர்ப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்றைய தினம் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஐவர் தொற்றாளிகள் என அடையாளம் காணப்பட்டனர்.

அவ்வாறு இனம் காணப்பட்ட ஐவரில் மூவர் தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்தவர்கள்.

மற்றைய இருவரும் போலியகொட மீன் சந்தைக்குச் சென்று கடந்த வெள்ளிக்கிழமையே யாழ்.திரும்பியிருந்தனர்.

பக்கத்தில் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த இவர்கள் அருகில் பாஷையூரை ஒட்டிய பகுதியில் உள்ள தமது நிறுவனத்துக்கு வந்து சேர்ந்த கையோடே அவர்களை சுகாதார அதிகாரிகள் கண்காணிப்புக்குள் கொண்டுவந்துவிட்டனர் என்று கூறப்பட்டது.

அவ்வாறு வெள்ளிக்கிழமை அவர்கள் யாழ்ப்பாணம் திரும்பிய நிலையில் வெள்ளிக் கிழமையே தனிமைப்படுத்தப்பட்டு, சனிக்கிழமை மாதிரி பெறப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்கு அது உட்படுத்தப்பட்டது.

இருந்தபோதும் அன்றைய தினம் உறுதியான பெறுபேறு கிடைக்காதமையால் மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் பிராந்திய பொது சுகாதார வைத்திய அதிகாரியினால் மீளவும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட சமயம் இருவருக்கும் கொரோனா உறுதி செய்யப்பட்டது. அதன் அடிப்படையிலேயே இரு கிராம சேவகர் பிரிவுகளையும் தனிமைப்படுத்த வேண்டும் எனப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

முடக்கப்பட வேண்டிய பிரதேசங்களை அடையாளம் காணும் நடவடிக்கையாக யாழ்ப்பாணம் பொது சுகாதார வைத்திய அதிகாரி நேற்றிரவிரவாக அப்பகுதியில் கடமையில் இருந்தமையை அவதானிக்க முடிந்தது.

இலங்கையிலேயே அதிக மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஒன்றாக யாழ்ப்பாணம் குருநகர் பிரதேசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 64 பொலீஸ் பிரிவுகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு!

இலங்கையில் உள்ள 64 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய கொழும்பு மாவட்டத்தின் 15 பொலிஸ் பிரிவுகளிலும் கம்பஹா மாவட்டத்திலும் குளியாப்பிட்டியில் 5 பொலிஸ் பிரிவுகளிலும் களுத்துறை மாவட்டத்தின் 3 பொலிஸ் பிரிவுகளிலும் வெல்லம்பிட்டி, கொத்தட்டுவ, முல்லேரியா மற்றும் வெலிகடை பொலிஸ் பிரிவுகளிலும் இவ்வாறு தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்திற்கு பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் மறு அறிவித்தல் வரையில் தொடர்ந்து அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கம்பஹா மாவட்டத்தில் பொதுமக்களுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக நேற்று காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை வர்த்தக நிலையங்கள் மற்றும் மருந்தகங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுளளது.

மாவட்டத்திலுள்ள மக்கள், தமக்கு அருகிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் மருந்தகங்களுக்குச் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# தொற்று நிலைமை மிக மோசம் நாடு முழுவதுமே பரவல் நிலை!

## பொது சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கத்தின் தலைவர் எச்சரிக்கிறார்



மினுவாங்கொடை மற்றும் திவுலப்பிட்டி கொவிட் தொற்று மிகவும் மோசமான நிலையை ஏற்படுத்தி வருவதாக பொது சுகாதார பரிசோதகர்களின் சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

பேலியகொட உப கொத்தணியுடன் நாடு முழுவதும் கொவிட் தொற்றுப் பரவி உள்ளதாகவும் சில தொற்றாளர்கள் அறிகுறிகள் இன்றி பதிவாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் மேல் மாகாணத்தின் கொழும்பு மாநகர சபையின் சில பிரதேசங்கள் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார பிரிவினரிடம் இருந்து நழுவி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பல பகுதிகளுக்கான தபால் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன!

நாட்டின் நிலவும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பல பகுதிகளுக்கான தபால் சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்குத் தபால் திணைக்களம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

அதன்படி மேல் மாகாணத்தில் உள்ள அனைத்துத் தபால் நிலையங்கள், காலியில் உள்ள பிரதான மற்றும் துணை தபால் நிலையங்கள், குளியாபிட்டிய தபால் நிலையம் மற்றும் குருணாகல் மாவட்டத்தின் சன நெருக்கடியாகப் பகுதிகளில் அமைந்துள்ள தபால் நிலையங்கள் மற்றும் பல முக்கிய, துணை தபால் நிலையங்களின் சேவைகள், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அலுவலகங்களின் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படவுள்ளன.

அது மாத்திரமன்றி மத்திய தபால் பரிமாற்றம் மற்றும் தபால் திணைக்களத்தின் பொது மக்கள் சேவைகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

# இலங்கையில் அபாயகரமான பகுதிகளை அறிவித்தது தொற்று நோயியல் பிரிவு!

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பாக அதிக அபாயமுள்ள பிரதேசங்கள் சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 14 நாள்களில் காணப்பட்ட நிலைவரத்தின் அடிப்படையில் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய அதிகூடிய அபாயமுடைய பகுதிகளாக யாழ். மாவட்டத்தில் வேலணை மற்றும் கண்டாவளை ஆகிய பகுதிகளும் வவுனியா மாவட்டத்தில் வவுனியா பகுதியும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் புத்தளம், ஆனைமடு மற்றும் முந்தள் ஆகிய பகுதிகள் அபாயமுடையவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மாத்தளையில் பஸ்கொட மற்றும் பெல்லேபொல, வில்கமுவ என்பனவும் அம்பாறை மாவட்டத்தில் மகாஓயாவும் அபாயமுடைய பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மொனராகலை மாவட்டத்தில் மெதகம, கேகாலை மாவட்டத்தில் மாவனெல்ல மற்றும் ரன்வெல, கண்டியில் யடிநுவர மற்றும் கங்காவத்த, நுவரெலியாவில் பம்பரதெனிய ஆகியவை அபாயமுடைய பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

குருணாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டி, நாரம்மல, பன்னல, அலவ்வ மற்றும் பொல்கஹாவெல ஆகியன அபாயமுடைய பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கம்பஹாவில் மீரிகம, திவுலபிட்டி, கட்டான, சீதுவ, மினுவங்கொடை, வத்தளை, ஜா – எல, அத்தனகல, வெயங்கொடை, கம்பஹா, றாகம, களனி, தொம்பே, பியகம, கிரிந்திவெல மற்றும் பூகொட ஆகியவை அபாயமுடைய பகுதிகளாகும்.

கொழும்பில் கடுவலை, கொத்தொட்டுவ, கொலன்னாவை, பத்தரமுல்ல, புறக்கோட்டை, நாவல, கஹதுட்டுவ, பிலியந்தல மற்றும் வத்துவ ஆகியன அபாயமுடைய பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

களுத்துறையில் மத்துகம, அம்பாந்தோட்டையில் சூரியவெள ஆகிய பகுதிகள் அபாயமுடைய பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

# இரட்டைக் குடியுரிமை சரத்தை நீக்குவதற்கு ஜனாதிபதி மறுப்பு



இரட்டைக்குடியுரிமைபெற்ற ஒருவர் அரசியலில் ஈடுபட அனுமதிக்கும் அரசமைப்பு விதிகளை மீளப்பெற வேண்டும் என்ற கோரிக்கை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆத்திரமூட்டியதாக அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரட்டை குடியுரிமை பெற்றவர்களில் நாட்டை நேசிக்கும் மற்றும் நாட்டுக்காக சேவை செய்ய விரும்பும் நபர்கள் உள்ளனர் என்று ஜனாதிபதி கூறியுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்துள்ளார்.

20 ஆவது திருத்தத்தில் இரட்டை குடியுரிமை தொடர்பான விதிகள் சமீபத்தில் நாடாளுமன்ற வாக்கெடுப்பைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக அமெரிக்க குடியுரிமையைக் கைவிட்டபோது அவர் சந்தித்த அசௌகரியங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார் எனவும் வீரசுமன வீரசிங்க குறிப்பிட்டார்.

# அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்பட்டுள்ள இடைவெளியை தமிழர்கள் தரப்பு பயன்படுத்துமா?

## ரெலோ இளைஞர் அணியின் செயலாளர் சபா.குகதாஸ் கேள்வி

யாழ்ப்பாணம்,ஒக்.27

இலங்கை அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் கிட்டியுள்ள இடைவெளியைத் தமிழ் தலைமைகள் கையாளுமா என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் ரெலோ இளைஞர் அணியின் செயலாளருமான சபா.குகதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

சபா.குகதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:–

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் வெளியுறவுக் கொள்கையில் தங்களுக்கு கடந்தகாலத்தில் ஏற்பட்ட ஜெனிவாப் பிரச்சினையை முறியடிக்கும் நோக்கில் நகர்வுகளை முன் நகர்த்தி வருகின்றது.

இதன் அடிப்படையில் சீன சார்புக் கொள்கையை அதுவ்கூர்மைப்படுத்தியுள்ளது. இதனால் அமெரிக்க, ஐரோப்பிய, இந்திய நாடுகளின் கழுகுப் பார்வைக்குள் அது உள்வாங்கப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையின் வெளியுறவு நடவடிக்கையில் ஓர் இடைவெளி ஏற்பட்டுள்ளது. இதனைத் தமிழர்களுக்கு சாதகமாக பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் மீளத் தமிழர் தலைமைகளுக்கு கிடைத்துள்ளது. இதனை எவ்வாறு இராஜதந்திரமாகக் கையாளப் போகிறார்கள் என்பது பலர் மத்தியில் எழுந்துள்ள வினா.

உண்மையில் கடந்தகால அரசியல் நகர்வுகளைச் சரியாக அவதானிக்கும் போது உள்நாட்டில் தமிழர்களுக்கு இறுக்க நிலைமை உருவாகும் போது சர்வதேசத்தில் சாதகமான ஏதுக்கள் வெளிவந்தன. ஆனால் அவற்றைத் தமிழர் தரப்பினர் பல தடவைகளில் சரியாக கையாளத் தவறிவிட்டனர். அதே வேளை பயன்படுத்திய சந்தர்ப்பங்கள் சில உண்டு. அச் செயற்பாடுகள் தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலைமைகள் ஏற்பட்டமையும் வரலாறு.

உதாரணமாக 1983 ஏற்பட்ட ஜூலை இனக் கலவரத்தை அடுத்து இந்தியாவின் கண்டனத்திற்கும் தலையீட்டிற்கும் இலங்கையில் ஜே.ஆர். அரசு உள்ளாவதற்கு அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணி இராஜதந்திரத்தைக் கையாண்டது.

இலங்கைத் தீவில் கடந்தகாலங்களை விட தமிழ்த் தேசிய இனத்தின் வாக்குப் பலம் இல்லாது தனிச் சிங்கள பெரும்பான்மைப் பலத்துடன் வந்துள்ள அரசாங்கம் தொடர்ச்சியாக தமிழர்களுக்கு ஓர் இறுக்கமான, நெருக்கடியான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கான ஏது நிலை உள்நாட்டில் தொடர்ந்து காணப்படும் போது தமிழத் தலைமைகள் வெளிச் சக்திகளின் அழுத்தங்கள் மூலமே பிரதான இலக்கை நகர்த்த முடியும். அதற்கான சாதக சூழல் தற்போது வெளிநாட்டு இராஜதந்திர நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தலைமைகள் ஆளுக்கு ஒருவர் ஒவ்வொரு கருத்துக்களை முன்வைப்பதைத் தவிர்த்து, கூட்டாக, இரகசியமாக, சாணக்கியமாகச் செயற்படத் தயாராக வேண்டும். வெறுமனே பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதி பத்திரிகைக்கு போடுதல், ஊடகங்களில் வெளிநாட்டு ராஜதந்திரிகளுடன் உரையாடிய விடயங்களை விவரித்தல், தனி நபர்களாக வெளிநாட்டு முக்கியஸ்த்தர்களைச் சந்தித்தல் இவை எல்லாம் அரசாங்கத்தைப் பலப்படுத்தும் செயற்பாடாகவே அமையும். இதனைத் தவிர்த்து தந்திரோபாயமாக காய்களை நகர்த்துவதே காலத்தின் கட்டாயம். இதுவே இனத்தின் எதிர்காலத்திற்கும் ஆரோக்கியமாக அமையும். – என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இது 'அள்ளி' வைப்பு!

தென்னிலங்கையில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் நாட்டில் நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கல் துறை ஆகிய இரண்டையுமே வசப்படுத்திக் கொண்டு விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது. இது சிறுபான்மை இனங்களின் இருப்புக்கும் வாழ்வுக்கும் பேராபத்து நிலைமை என்று இப்பத்தியில் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டு வந்தோம்.

இந்தச் சமயத்தில், அந்த நிறைவேற்றதிகாரத்துக்கு கட்டுமட்டில்லாத – வரையறையில்லாத – அதிகாரங்களை வாரி வழங்கும் விதத்தில் இருபதாவது அரசமைப்புக்கான திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு, சிறுபான்மை இனங்களில் ஒன்றான முஸ்லிம்களின் மக்கள் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்வோர் கடைசி நேரத்தில் துணை போனமை மூலம் தம்மையும் சேர்த்து சிறுபான்மையினர் தலையில் தாமே மண்ணை அள்ளிக் கொட்டியிருக்கின்றார்கள்.

இருபதாவது திருத்தத்தின் கீழ் நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கு மிதமிஞ்சிய அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் இத்தகைய அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்படுவதால் முஸ்லிம்களுக்கு என்ன பாதிப்பு, ஆகவே நாம் அந்த அரசமைப்புத் திருத்தத்தை ஆதரிக்கும் முடிவுக்கு வந்தோம் என்று முஸ்லிம் காங்கிரஸின் எம்.பியான எச்.எம்.எம்.ஹரீஸ் கூறியிருக்கின்றமை அபத்தத்திலும் அபத்தம். ஒரு பொறுப்புள்ள நாடாளுமன்ற உறுப்பினருக்குரிய அடிப்படைத் தகைமை கூட இல்லாத கூற்று இது.

*"ஆக, ஜனாதிபதிக்குக் கிடைக்க வேண்டிய அதிகாரங்கள் இச் சட்டத்தின் மூலம் கிடைப்பதில் முஸ்லிம் சமூகத்துக்கு எவ்வித பாதகமும் இல்லாத நிலையில் நாங்கள் ஏன் அதனை எதிர்த்து வாக்களிக்க வேண்டும்?"* என்று நியாயம் பிளந்திருக்கின்றார் ஹரீஸ் எம்.பி.

'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்பதுதான் அவர்கள் ஆதரவு தந்து, வானளாவ அதிகாரத்தைக் கொடுத்திருக்கும் ஜனாதிபதி கோட்டாபயவின் ஒரே திட்டம்.

அதன் அர்த்தம் நுணுக்கமானது; நுட்பமானது; ஆழமானது; சிறுபான்மை இனங்களைப் பொறுத்தவரை விபரீதங்கள் அதிகம் கொண்டது.

இருபது வருடங்கள் அரசியலில் இருக்கின்றோம், அரசியல் விடயங்கள் எல்லாம் எங்களுக்கு அத்துப்படி, அதில் ஆழ்ந்த அறிவு கொண்டுள்ளோம் என்று நேற்று முன்தினம் தாம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தமக்குத் தாமே மகுடம் சூடிக்கொண்ட அரசியல் விற்பன்னர் ஹரீஸ்க்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'ஒரே நாடு – ஒரே திட்டம்' கொள்ளைப் பிரகடனத்தின் ஆழ, அகலம் புரியாமல் இருக்காது என்று நம்புகின்றோம்.

'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்பதே சிறுபான்மையினருக்குத் தனித்துவமான சட்டங்களுக்கு ஆப்படிப்பதுதான் என்பது அரசியலில் அரிச்சுவடி படித்தவருக்கும் புரியும்.

சிறுபான்மை இனங்களின் தனித்துவச் சிறப்புரிமைகளை இல்லாமல் செய்யும் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் மற்றொரு நியாயப்பாட்டு விளக்கம்தான் அந்தக் கொள்கைப் பிரகடனம்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை இந்த நாட்டில் மற்றைய மக்களுக்கு இல்லாத பல சிறப்புச் சட்டங்கள், உரிமைகள் விசேடமாக உள்ளன. முஸ்லிம்கள் திருமணச் சட்டத்திலிருந்து காதி நீதிமன்றங்கள் வரை பல கட்டமைப்புக்களை இந்த 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற திட்டம் காவு கொள்ளப் போகின்றது.

கொரோனாத் தொற்றுத் தடுப்பு நடவடிக்கையில், அத்தொற்றினால் உயிரிழப்போரின் விடயத்தில், மற்றைய உலக நாடுகளின் வழிமுறைகளுக்கு மாறாக கோட்டாபய அரசு மட்டும் தான் எடுத்த தீர்மானத்தில் – அதை நடைமுறைப்படுத்துவதில் – பிடிவாதமாக இருக்கின்றது. அது காட்டிவரும் தீவிர உறுதியை – ஹரீஸ் எம்.பி. மறந்திருக்க மாட்டார் என்று நம்புகின்றோம். ஏனெனில் இறந்த ஒரு முஸ்லிமின் ஜனாஸாவைத் தீயிட்டு எரிப்பதில் – தகனம் செய்வதில் – உள்ள இஸ்லாமிய மனச் சஞ்சலம், இஸ்லாமியரான அவருக்கு நன்கு நெஞ்சைத் தொட்டிருக்கும்.

சிறுபான்மையினர் விடயத்தில், அவர்களின் தனித்துவங்கள், வழக்காறுகள், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள், மதம், மொழி, கல்வி, தொழில் முயற்சிகள், பண்பாட்டுக் கோலங்கள், வாழ்வியல் விழுமியங்கள், இருப்பு ஆகியவற்றை சிதைத்தழிப்பதில் பேரினவாதம் எத்தகைய வெறித்தனத்தில் இப்போது இருக்கின்றது என்பது நேற்று வரை எதிரணியில் இருந்து அதற்காகக் குரல் கொடுத்த ஹரீஸ் முதலான ஆறு முஸ்லிம் எம்.பிக்களுக்கும் நன்கு தெரியும், புரியும்.

மனச்சாட்சியப்படி வாக்களிப்பதற்கு தமது கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தங்களை அனுமதித்தார் என்றும், அதனால் தாங்கள் அப்படி வாக்களித்தார்கள் என்றும், அவர்கள் தரப்பில் வியாக்கியானம் வேறு.

அப்படியானால், நாட்டின் மிக மிக முக்கிய தேசியப் பிரச்சினையில், முஸ்லிம்கள் உட்பட்ட சிறுபான்மையினரின் சிக்கல்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில், முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் நால்வரின் மனச்சாட்சி ஒரு பக்கமாகவும், அக்கட்சியின் தலைவர் ஹக்கீமின் மனச்சாட்சி அதற்கு தலைகீழ் முரணாகவும் உள்ளது என்பதுதான் அர்த்தம். என்னே விந்தையான நிலைப்பாடு இது. என்னே விந்தையான கட்சி இது?

சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கக் கங்கணம் கட்டி நிற்கும் ஒரு பேரினவாதிக்குக் கட்டுமட்டில்லாத அதிகாரம் கிடைப்பதற்கு வழி செய்யும் நடவடிக்கைக்குத் துணை போனமை மூலம் முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமல்ல, சிறுபான்மை இனங்களுக்கு மட்டுமல்ல, முழு நாட்டுக்குமே 'அள்ளி' வைத்து விட்டார்கள் என்பதை சரித்திரம் நாளை அவர்களுக்கும் சேர்த்துக் கூறும். அதுதான் இந்தத் தீவின் துரதிஷ்டமாக அமையும்.

# துமிந்த சில்வாவின் பொது மன்னிப்பு மனுவில் நாம் கையொப்பமிடவில்லை!

## மறுக்கின்றனர் அரச தரப்பு எம்.பிக்கள்

மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட துமிந்த சில்வாவை பொது மன்னிப்பில் விடுவிக்கக் கோரி மனுவில் கையெழுத்திட்டனர் என வெளியான செய்திகளை பல அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறுத்துள்ளனர்.

இதுபோன்ற மனுவில் தாங்கள் கையெழுத்திடவில்லை என அரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கெஹலிய ரம்புக்வெல, மஹிந்த அமரவீர, விதுர விக்ரமநாயக்க மற்றும் விமலவீர திசாநாயக்க மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர் தெரிவித்தனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்குப் பொது மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்க மனுவில் கையெழுத்திட்டதாக ஆங்கில ஊடகத்தை சுட்டிக்காட்டி நேற்றுமுன்தினம் செய்திகள் வெளியாகியிருந்தன.

மேலும் கையெழுத்திட்ட இந்த மனுவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்க தீர்மானித்திருந்தனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்நிலையில் கொழும்பைத் தளமாக கொண்டியங்கும் ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியில், தங்கள் கையொப்பத்துக்காக இதுபோன்ற ஒரு மனு தங்களுக்கு வழங்கப்படவில்லை என்றும், அத்தகைய நடவடிக்கை தொடர்பில் தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாரத லக்ஷமன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வரை சுட்டுக்கொலை செய்த குற்றத்துக்காகத் துமிந்த சில்வா உள்ளிட்ட குற்றவாளிகளுக்கு 2016 செப்ரெம்பர் 8 ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சமூகத் தொற்றின் விளிம்பில் இலங்கை!

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

கொரோனா தொற்றின் அண்மைய அதிகரிப்பு தொற்று உறுதியான நோயாளிக்கு சிக்கல்களை ஏற்படுத்த அதிக வாய்ப்பு இருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மினுவாங்கொடை கொத்தணி 6 அல்லது 8 வாரங்கள் தொடர்ந்து இருக்க வாய்ப்பு உள்ளது என்றும் சுகாதார சேவைகளின் பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

மேலும் ஒரு வயதான நோயாளி அல்லது ஒரு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகினால் அவரின் நிலைமை தீவிரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தக் கொத்தணியில் இருந்து வைரஸ் பரவுவது எந்த நேரத்திலும் வேகமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் வைத்தியர் ஹேமந்த ஹேரத் எச்சரித்தார்.

அத்தோடு நாட்டில் ஒரு கடுமையான நிலைமை உருவாகியுள்ளது என்றும், எனவே, சமூகத் தொற்று ஏற்படும் விளிம்பில் இலங்கை இருப்பதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதம செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் 4 லட்சத்து 50 ஆயிரம் தாண்டியது பி.சி.ஆர். பரிசோதனைகள்!

இலங்கையில் 4 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பி.சி.ஆர். சோதனைகள் முடிவடைந்துள்ளன எனக் கொவிட் – 19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் நேற்றுமுன்தின நிலைவரப்படி, தனிமைப்படுத்தப்பட்ட பணியை முடித்து இது வரை 57 ஆயிரத்து 427 பேர் வீடு திரும்பியுள்ளனர் எனவும் அந்த மையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தல் காலத்தை முடித்த மொத்தம் 316 பேர் நேற்று (திங்கட்கிழமை) தங்கள் வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் இருந்து தற்போது வரை முப்படையினரால் நிர்வகிக்கப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து இது வரை 57 ஆயிரத்து 427 பேர் வெளியேறியுள்ளனர். தற்போது மேலும் 8 ஆயிரத்து 421 பேர் இன்னும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

# வீதி புனரமைப்புப் பணிகள் சிறிதரனால் ஆரம்பித்துவைப்பு!



பரவிப்பாஞ்சான் சமாதான செயலக வீதி புனரமைப்பு பணிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

இந்த வீதி கரைச்சி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக ஒரு கோடியே 50 லட்சம் ரூபா செலவில் இந்த வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

மேற்படி நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், தமிழரசுக் கட்சியின் பரவிப்பாஞ்சான் பகுதி அமைப்பாளர் விஸ்வலிங்கம் மற்றும் கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் பல கிராமங்கள் முடக்கம்!

## ஒரே குடும்பத்தில் தந்தைக்கும் இரு குழந்தைகளுக்கும் தொற்று

இரத்தினபுரி பொலிஸ் அதிகாரப் பிரதேசத்தில் ஒரே நாளில் மாத்திரம் நான்கு நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டமையையடுத்து இப்பிரதேசத்தின் பல கிராமங்கள் சுகாதார மற்றும் பாதுகாப்புத்துறையின் உத்தரவுகளுக்கு இணங்க நேற்று முதல் மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளன.

பேலியகொடை மீன் சந்தை கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய இரத்தினபுரி மல்வல எம்புல்தெனிய கிராமத்தின் நபர் மற்றும் அவரின் இரண்டு குழந்தைகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது எனவும், இதே போன்று ஹலிய கொடை பிரதேச நபர் ஒருவருக்கும் இத்தொற்று உள்ளது எனவும் இப்பிரதேசங்களின் பொதுச் சுகாதார அதிகாரி காரியாலயங்கள் நேற்று உறுதிப்படுத்தின.

இதனையடுத்து இரத்தினபுரி பொலிஸ் அதிகார பிரதேசத்தின் எகொட ஸ்ரீபாகம, உதுரு கிலீமல, தகுனு கிலீமல, கெட்டவல, மாபலான ஆகிய கிராமங்கள் முடக்கப்பட்டன.

மேலும் இன்று காலை முதல் குருவிட்ட ஹேனெகம – ஓலுகல வீதி, குருவிட்ட – ரத்துருகல ஆகிய வீதிகளும் அவற்றில் உள்ளடக்கப்படும் சில கிராமப் பகுதிகளும் மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளன.

மேற்படி கிராமங்களும் வீதிகளும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டுள்ள நிலையில் ஏனைய கிராமங்களில் வாழும் மக்கள் சுகாதார அறிவுறுத்தல்களை முழுமையாகப் பேணுவதன் மூலம் தத்தமது பிரதேசங்கள் முடக்கப்படும் அச்சுறுத்தலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் எனச் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நுவரெலியாவில் மேலும் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதியானது!

நுவரெலியா, ஒக்.27

நுவரெலியா – கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொட்டகலை – சின்ன டிரேட்டன், வூட்டன் ஹில்ஸ், தலவாக்கலை தெவிசிறிபுர ஆகிய பகுதியைச் சேர்ந்தவர்களுக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் மூவரும், பேலியகொடை மீன் சந்தையில் தொழில் புரிந்த நிலையில் வீடு திரும்பியுள்ளனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் பிரகாரமே வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் அந்த மூவரும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில் அவர்களின் பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதியான நிலையில் மூவரும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து கொட்டகலை நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன என்று கொட்டகலை பிரதேச சபையின் தலைவர் ராஜமணி பிரசாந்த் தெரிவித்தார்.

எனவே, எவரும் நகரப்பகுதிகளுக்கு வர வேண்டாம் எனவும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வீடுகளிலேயே இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

## கல்முனையைப் பறிக்க கூட்டமைப்பு முற்பட்டது!



### ஹரீஸ் எம்.பி. குற்றச்சாட்டு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த 5 வருடங்களாக கல்முனை நகரை எம்மில் இருந்து பறிக்க முற்பட்டது என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் பிரதி தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் குற்றம்சாட்டியுள்ளார்.

கல்முனை பகுதியில் 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவு வழங்கியமை தொடர்பில் தன்னிலை விளக்கம் அளிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த 5 வருடங்களாக கல்முனை நகரை எம்மில் இருந்து பறிக்க முற்பட்டது. வடக்கு, கிழக்கில் உள்ள கூட்டமைப்பு உறுப்பினர்கள் அரசாங்கம் சர்வதேசத்துடன் நல்லுறவை பேணி வருகின்றனர். ஆனால் எமது மக்களுக்காக நாம் ஒரு நடவடிக்கை எடுக்கின்ற போது கூட்டமைப்பானது அரசாங்கத்திற்கு எதிராக போராட வேண்டும் என்கின்றனர்.

அல்லாவிடின் நீங்கள் துரோகிகள் என சுமந்திரன் என்பவர் அறிக்கை விடுகின்றார். நாங்கள் எடுப்பார் கைப்பிள்ளையா? இவர்கள் வடகிழக்கினை இணைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவ்வாறாயின் எமது சமூகம் கடலில் கொண்டு போய் விழுவதா எனக் கேட்க விரும்புகின்றேன். நாங்கள் 20 வருடங்கள் அனுபவம் உள்ளவர்கள். உலக அரசியல் ஞானம் உள்ளவர்கள். பூலோக அரசியலையும் படித்துக்கொண்டு இருப்பவர்கள்.

சிலருக்கு கல்முனை பறி போவதால் எனது அரசியல் முடிவு பெறும் என நினைக்கின்றனர். அவர்களது மனநிலை உள்ளது. ஒரு சமூகத்தை அழித்து தங்கள் குறிக்கோளை அடையமுற்படவும் முயற்சிக்கின்றனர். – என்றார்.

## அம்பாந்தோட்டை மீன்பிடி துறையில் இருவருக்குக் கொரோனாத் தொற்று!

அம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தில் பணிப்புரிந்த இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தில், கடந்த 23 ஆம் திகதி 57 மீனவர்கள் உட்பட பலருக்கு பி.சி. ஆர். பரிசோதனை மேற்காள்ளப்பட்டது.

அந்தப் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள், நேற்றுமுன்தினம்ஞாயிற்றுக்கிழமை வெளியாகியுள்ள நிலையில் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர், கடந்த 21ஆம் திகதி, பேலியகொட மீன் சந்தைக்குச் சென்றமையால் சுய கட்டுப்பாட்டில் இருந்துள்ளார். ஆனால் மற்றொருவர், பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் கிடைக்கும் வரை சமூகத்தில் அலைந்து திரிகின்றமை கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தைச் சேர்ந்த மொத்தம் 57 மீனவர்கள் மற்றும் அண்மைய நாள்களில் பல்வேறு காரணங்களுக்காக கம்பஹாவிற்கு பயணம் செய்த 60 பேரின் மாதிரிகள் கடந்த 23 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பப்பட்டனர் எனச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், பேலியகொட பகுதிக்கு சென்ற அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சேர்ந்த ஆறு மீனவர்களுக்கும் இதேபோன்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின்பேரில் பிற மீனவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## காலி மாவட்டத்தில் இதுவரையில் 43 பேருக்கு கொரோனாத் தொற்று

காலி மாவட்டத்தில் இதுவரை 43பேருக்குகொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளதாக அம் மாவட்ட தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகம் மற்றும் பெலிய கொட மீன் சந்தைபகுதிகளுக்குசென்று, திரும்பியவர்களினாலேயே கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை காலியிலும் இவ்வாறு அதிகரித்தமைக்குகாரணமெனதொற்று நோயியல் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக தொற்றுநோயியல் நிபுணர் டாக்டர் வேணுர கே.சிங்காராய்ச்சி மேலும் கூறியுள்ள தாவது:-

கொழும்பு துறைமுகத்துடன்தொடர்புபட்ட 32பேருக்கும் பெலியகொட மீன் சந்தையுடன் தொடர்புபட்ட 11பேருக்குமே இவ்வாறு கொரோனாவைரஸ்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 24ஆம் திகதி பலபிட்டிய – கடு வெல பகுதியில் 582பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவர்களில் 362 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்படாமல் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் 50 பி.சி. ஆர்.பரிசோதனை முடிவுகள் இன்னும் வரவில்லை. மேலும் 175 பி.சி.ஆர். சோதனைகள் செய்யப்பட உள்ளன.

இதுவரை எல்பிட்டியவில் ஒருவருக்கும், கரந்தெனியவில் ஒருவருக்கும், இதுரு வேயில் 2பேரும், ரத்கமவில் 4 பேருக்கும், காலி நகராட்சி பகுதியில் 4 பேருக்கும் சுகாதாரப் பிரிவின் பலபிட்டி வைத்திய அதிகாரிகள் பிரிவுக்குள் 32 பேருக்கு இவ்வாறுகொரோனாவைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டக்குளி, கொட்டாஞ்சேனைக்கு விசேட அதிரடிப் படை பாதுகாப்பு!

மட்டக்குளி – கொட்டாஞ்சேனை பகுதிகளுக்கு விசேட பாதுகாப்பு குழுவினர், கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர் என கொவிட் 19 தொடர்பான செயலணி தெரிவித்துள்ளது.

இராணுவத் தளபதியின் உத்தரவின்பேரில், மட்டக்குளி – சமித்புர பகுதிகளில் விசேட பாதுகாப்பு பிரிவினரை, கண்காணிப்பு நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபடுத்தியுள்ளனர்.

மேலும், கொட்டாஞ்சேனை கிழக்கு புளுமெண்டல், லங்காபுர பகுதிகளிலும் விசேட பிரிவொன்றை கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தவுள்ளனர் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



## ஊரடங்கை மீறிய குற்றச்சாட்டு ஆயிரத்து 76 பேர் கைதாகினர்!

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இது வரை ஆயிரத்து 76 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேர காலப் பகுதியில் 152 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதன்போது 16 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித் துள்ளார்.

ஒக்ரோபர் 4 ஆம் திகதி தனிமைப் படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட திலிருந்து இதுவரை ஆயிரத்து 76 பேர் கைது செய் யப்பட்டுள்ளமையுடன், 156 வாகனங்களும் பறிமுதல் செய் யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## தொழிற்சங்கவாதி, கூட்டுறவாளர், சமூகசேவையாளர்

**வட்டுக்கோட்டை, மாவடி, விளாத்தித் தோட்டத்தைச் சேர்ந்த சமூகச் செயற்பாட்டாளர் சி.இராமச்சந்திராவின் மறைவை அடுத்து அவரின் பூதவுடல் அவரின் இறுதி உயில்படி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்துக்கு கையளிக்கப்பட்டது. அவரின் 31 ஆம் நினைவு நாள் இன்றாகும். அதையொட்டி அவரின் நினைவை மீட்கும் இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

**வே.வரதசுந்தரம்**

# இடதுசாரிச் சிந்தனையாளர் இராமச்சந்திரா இன்றில்லை

வட்டுக்கோட்டை விளாத்தித் தோட்டம் ஈன்ற இடதுசாரிச் சிந்தையாளர், தொழிற்சங்கவாதி, கூட்டுறவாளர், சமூகசேவையாளர், மனிதநேயம் மிக்கார் இராமச்சந்திரா இன்றில்லை. அண்மையில் இறைபதம் எய்திவிட்டார்.

தூங்குவது போலும் சாக்காடு, தூங்கி விழிப்பது போலும் பிறப்பு என்பது நமக்குப் புரிந்தாலும், நல்லவர்கள் நம்மைவிட்டுப் பிரியும்போது, மனம் கலக்கம் அடைகிறது, கண்கள் பனிக்கின்றன. அவ்வாறே மனிதநேயம் மிக்க நல்ல மானுடன் இராமச்சந்திரா மறைவுகேட்டு கையறுநிலை உற்றோம்.

இவர் தனது பெற்றோரிடத்து, குறிப்பாகத் தன்தாயாரிடத்து மிகுந்த பாசமுடையவர். தன்தாயார் காத்த சூரிய நோன்பு என்பதால் ஞாயிறு காலை



விரதம் காத்தார்.

இவர் துணைவியார் சரஸ் என்று யாவரும் அன்புடன் அழைக்கும் நல்லம்மாள் இவரது முற்போக்குச் சிந்தனைகளுக்கு இசைவாக வாழ்ந்தார். தலைநகராம் கொழும்பில் பிறந்து, படித்து, வளர்ந்த அவர் புக்ககமாம் வட்டுக்கோட்டை விளாத்தித் தோட்டம் வந்து உறவினர்கள், அயலவர்கள் அனைவரின் அன்பினைத் தனது இன்முகம் காட்டும், இன்சொல் பேசும், நோயுற்றோருக்குத் தேடிச்சென்று உதவியாற்றும் சேவையால் தேடிக்கொண்டதைக் கண்டு நெருங்கிய உறவினர் என்பதால் நான் பூரித்துப் போனதுண்டு.

துணைவர் இராமச்சந்திராவின் குடும்பத் தெய்வமாம் உடுக்குவளைப் பிள்ளையார்கோயிற்பணிகளில்முழுமையாக ஈடுபட்டு ஊரார் அனைவரின் பாராட்டைப் பெற்றார். நல்லம்மாள் என்ற பெயருக்கு ஏற்ப நல்லாளாக வாழ்ந்து மறைந்தார். பெண்ணில் நல்லாள் நல்லம்மாள், இராமச்சந்திரா அவர்கட்கு இல்லாளாகக் கிடைத்தமையால் அவர்கள் வாழ்க்கைத் தேர் சீரிய பாதையில் பயணித்தமை கண்டோம்.

தனது உறவினர் நீர்வேலியைச் சார்ந்த இடதுசாரி சிந்தனையாளர்கள் கந்தையா, வேதவல்லி தம்பதியரின் தாக்கத்தினால் இளம்வயதிலேயே இராமச்சந்திரா மார்க்ஸியத்தில் ஈடுபாடு கொண்டார். இடதுசாரிச் சிந்தனையாளர் வழக்கறிஞர் துரைசிங்கம் என்பார் கொழும்பில் நடாத்திய மார்க்ஸிய வகுப்புகளில் தவறாமல் பங்குபெற்றார்.

யோகாசனம் பயின்று, அதனை நாள்தோறும் செய்து தனது உடல்நலம், மனநலம் பேணியதாற்போலும் எத்தகைய சூழ்நிலையிலும் அவர் பரபரப்பின்றி அமைதி காத்தார்.

இராமச்சந்திரா கொழும்பில் புகையிலைக் கூட்டுத்தாபனத்தில் கணக்கியல் கிளையில் உயரதிகாரியாக நீண்டநாள்கள் பணியாற்றி ஓய்வுபெற்றார். வெண்ணிற ஆடையுடுத்தி, வேளையோடு காரியாலயம் சென்று, மாலைவரை கட்டுப்பாடு, கண்ணியம் பேணிக் கருமம் ஆற்றினார். அங்கு சேவையாற்றிய தொழிலாளர்கள் கொடுப்பனவுகளைத் தாமதமின்றிப் பெறவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

இவர் தான் தொழிலாற்றிய அலுவலகத்துத் தொழிற்சங்கத்தில் செயற்குழு உறுப்பினராக இருந்தார். பிரபலமான, துணிச்சலான தொழிற்சங்கவாதி இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் பாலாதம்புவின் தலைமையில் தொழிற்சங்கப் பணிகளை ஆற்றினார். ஆண்டுதோறும் மேதினத்தன்று செஞ்சட்டை, சிவப்புநிறத் தொப்பி அணிந்து தொழிலாளர் சார்புக் கோங்களை எழுப்பியவாறு அணிவகுத்துச் செல்வார். அவ்வேளை தோழர் இராமச்சந்திராவின் ஆளுமை கண்டு வியந்துள்ளேன்.

இடதுசாரிச் சிந்தனையாளர் என்பதால் இலங்கை கமியுனிஸ்ட் கட்சிக்கு ஆதரவு வழங்கினார். வடமாகாணத்துப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொ. கந்தையா, வி.பொன்னம்பலம் ஆகியோரால் இவர் ஈர்க்கப்பட்டார்.

நாடாளுமன்றத் தேர்தல் காலங்களில் அக்கட்சியின் தலைவர் பீட்டர் கெனமன் என்பாருக்கு ஆதரவாக பிரேமதாஸாவுக்கு எதிராக கொழும்பு மத்திய தேர்தல் தொகுதியில் இவர் தீவிரமாகப் பிரசாரம் செய்தார். சிங்களம் மட்டும் மசோதா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது பீட்டர்கெனமன் அதனைக் காரசாரமாகக் கண்டித்து உரையாற்றினார், அவரது கட்சி அம்மசோதாவுக்கு எதிராக வாக்களித்தது என்பது இராமச்சந்திராவின் வாதமாகும். மாத்தறையில் நடைபெற்ற மாநாட்டில் கமியுனிஸ்ட் கட்சி தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுண்டு என்று தீர்மானம் நிறைவேற்றியமையை இராமச்சந்திரா சுட்டிக்காட்டுவார்.



எண்பதுகளில் பீட்டர் கெனமன் யாழ்ப்பாணம் விஜயம் செய்தபோது, கமியுனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் தன்ஆதரவாளர்களைச் சந்தித்தார். ஐலண்ட் பத்திரிகை வடமாகாண நிருபரென்ற ரீதியில் யானும் கலந்துமொண்டேன். இவரைக் கண்டதும் கெனமன் இவரைக்கட்டித்தழுவி பழைய சம்பவங்களை நினைவூட்டிக் கலந்துரையாடினார். தலைவர் கெனமன் – தோழர் இராமச்சந்திரா தோழமை கண்டு வியந்து போனேன்.

கூட்டுறவுத் துறையிலும் அவர் ஈடுபாடுகாட்டினார். வடமாகாணத்தில் கூட்டுறவு மூலம் அபிவிருத்தி காணவேண்டும் என்பதும் அவர் நிலைப்பாடாகும். கூட்டுறவு பற்றிய அவர் சிந்தனைகளை கட்டுரைகளாக எழுதியுள்ளார்.

எழுத்துத் துறையிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது. கொழும்பில் தேசாபிமானி ஆசிரியர் தோழர் இராமநாதனுடன் பத்திரிகைத் துறை, எழுத்துத் துறை பற்றி கலந்துரையாடுவார். சஞ்சீவி வாரஇதழின் பொறுப்பாசிரியராக யான் பணியாற்றியவேளை எனது வேண்டுகோளினை ஏற்று அவர் எழுதிய ஆக்கங்கள் அவ்விதழில் வெளிவந்தன.

பிரபல எழுத்தாளர் மு.வரதராசன் 'அன்புள்ள தம்பிக்கு', 'அன்புள்ள தங்கைக்கு', என்று விளித்து நூல்கள் எழுதிய பாணியில் தனது குடும்பத்தினருக்கு வரைந்த நல்ல சிந்தனைகளைத் தாங்கிய மடல்களை வாசித்து மகிழ்ந்துள்ளேன்.

அவர்தான் வரைந்த உயிலில் தான்மறைந்ததும் தனது உடலை யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். அவ்வாறே அவர் மறைந்ததும் அவர் வேண்டுகோள் நிறைவேறியது.

அன்புடையார் யாவற்றையும் ஏன் தமது உயிரை, உடலைக் கூட மற்றையவர்கட்குக் கைமாறு கருதாது ஈவர் என்னும் வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கு இலக்கணமாய் நம்மத்தியில் வாழ்ந்து மறைந்தனன் இராமச்சந்திரா!

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு."**

# எதிர்காலத்தில் பஸில் நாடாளுமன்று வருவார் என்ற செய்திகளுக்கு பதிலளிக்க அவர் மறுப்பு!

கொழும்பு, ஒக்.27

எதிர்காலத்தில் நாடாளுமன்றத்திற்குள் நுழைவார் என்ற செய்திகளுக்கு பதிலளிக்க முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மறுத்துவிட்டார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்திற்குள் நுழைவதற்கான பாதையை உருவாக்கப் பயன்படுத்தப்படவுள்ளது என்று ஊகங்கள் தெரிவித்திருந்தன.

இருப்பினும் இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பஸில் ராஜபக்ஷ கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார்.

தன்னை நாடாளுமன்றத்துக்கு அழைத்துவர பயன்படுத்தப்படுகிறது என கூறி 20 ஆவது திருத்தத்தின் முக்கியத்துவத்தைப் பறிக்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



தற்போது இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட பஸில் ராஜபக்ஷ தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படுவார் என்றும் தற்போது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அதற்காக இராஜினாமாச் செய்வார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் சேர்க்கப்பட்ட இரட்டைக் குடியுரிமை கொண்ட ஒருவர் நாடாளுமன்றம் நுழைய முடியும் என்ற விதி கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்குள் நுழைய அனுமதிக்கவே 20 ஆவது திருத்தம் தயாரிக்கப்பட்டது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருந்தார்.

அத்தோடு எதிர்காலத்தில் அமெரிக்கா மற்றும் சீனாவின் குடிமக்கள் பலரும் நாடாளுமன்றத்துக்கு நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

# முகக்கவசம் அணியாதவர்களைத் தடுத்து நிறுத்தி கடும் எச்சரிக்கையின் பின் விடுவிக்கும் பொலிஸார்



வவுனியா, ஒக். 27

இலங்கையில் கொரோனாவின் மூன்றாவது அலை வேகமாகப் பரவி வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக முகக்கவசம் அணியாது பயணிப்பவர்களைத் தடுத்து நிறுத்தி கடும் எச்சரிக்கையின் பின் வவுனியாப் பொலிஸார் விடுவித்து வருகின்றனர்.

இலங்கையில் அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணியுமாறு அரசு உத்தரவு பிறப்பித்திருந்த போதிலும் பெரும்பாலான மக்கள் அரசின் உத்தரவைப் பொருட்படுத்தாது முகக்கவசம் அணியாது பயணிக்கின்றனர்.

இதையடுத்து வவுனியா மாவட்ட கொரோனாத் தடுப்புப் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.பி.குருசிங்க தலைமையிலான பொலிஸார் நேற்று முதல் வவுனியா பழைய பஸ் நிலையம் மற்றும் வவுனியா நகரப் பகுதிகளில் முகக்கவசம் அணியாது செல்பவர்களைத் தடுத்து நிறுத்தி அவர்களைப் பதிவு செய்து கடும் எச்சரிக்கையின் பின் விடுவித்து வருகின்றனர்.

இவ்வாறு முகக்கவசம் அணியாது செல்வர்களை எச்சரிப்பது மாத்திரம் அல்லாது அவர்களது வாகனத்தை அவ்விடத்திலேயே நிறுத்தி விட்டு முகக்கவசத்தை வாங்கி அணிந்து விட்டு வாகனத்தை எடுத்துச் செல்லுமாறும் பொலிஸார் பொதுமக்களுக்கு பணிப்புரை விடுத்து வருகின்றனர்.

கொரோனா பரம்பலைக் கடுப்படுத்தப் பொலிஸார் எடுத்துள்ள இந்த நடவடிக்கை வவுனியா மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது. (உ- 100)

# மக்கள் ஒத்துழைக்காவிடின் நிலைமை மிகமோசமடையும்

## விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 27

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவும் நிலையில் நாட்டு மக்களின் பூரண ஒத்துழைப்பு மூலம் மட்டுமே நிலைமையை கட்டுப்படுத்த முடியும் என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மக்கள் சமூக இடைவெளியை அலட்சியப்படுத்தி நடமாட்டத்தை கட்டுப்படுத்தாவிட்டால் கொரோனா வைரஸை கட்டுப்படுத்த முடியாத ஒன்றாக மாறலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

நாளுக்கு நாள் வைரஸ் தொற்று பரவும் வேகம் அதிகரித்து வரும் நிலையில் இந்த நிலை தொடர்ந்தால் மேலும் பல உயிரிழப்புகள் ஏற்படலாம் என குறிப்பிட்டுள்ள அவர், தெரிவு செய்யப்பட்ட பகுதிகளிலேயே ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



பொதுமக்களின் நடமாட்டத்திற்கு அரசாங்கம் கட்டுப்பாட்டு விதிக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர் திருமணங்கள், சமய நிகழ்வுகள் மற்றும் மரணச் சடங்குகள் மூலமே இம்முறை கொரோனா வைரஸ் பெருமளவு பரவியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் நாட்டில் வைரஸ் பரவலை தடுக்கும் வகையில் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பொது மக்களின் பூரண ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை நேற்றுமுன்தினம் மேலும் 263 பேர் புதிதாக வைரஸ் தொற்று நோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ள நிலையில் நாட்டில் இதுவரை மொத்தம் 7784 வைரஸ் தொற்று நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

# புலிகள் மீதான தடையை நீக்காது பிரிட்டன் அரசு!!!

## கெஹலிய நம்பிக்கை

கொழும்பு, ஒக். 27



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை பிரிட்டன் அரசு தடை செய்தது தவறு என்று பிரிட்டனில் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் தொடர்பான விசேட ஆணையம் தீர்ப்பு வழங்கியிருந்தாலும் அதைப் பிரிட்டன் அரசு நடைமுறைக்குக் கொண்டு வரும் என்று நாம் நம்பவில்லை.

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வெளிநாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைப்பட்டியலிலிருந்து நீக்கினாலும் இலங்கை அரசு ஒருபோதும் அதைச் செய்யவே மாட்டாது. நாட்டில் மீண்டும் ஒரு போரை – இரத்தக் களரியை நாம் விரும்பவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மோசமான பயங்கரவாத அமைப்பு. இதை வெளிநாடுகள் கவனத்தில்கொள்ள வேண்டும். அந்த அமைப்பை இலங்கையில் நாம் இல்லாதொழித்தாலும் குறித்த அமைப்பைச் சேர்ந்த சிலர் வெளிநாடுகளில் தஞ்சம் கோரி அரசியல் நடத்துகின்றனர். அவர்கள் தொடர்பில் வெளிநாட்டு அரசுகள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் – என்றார்.

# பல வழக்குகளுடன் தொடர்புடையவர் கடல்வழியாக இந்தியா தப்பி ஓட்டம்!

## தமிழக கியூ பிரிவு பொலிஸார் அவரை மடக்கினர்

கிளிநொச்சி, ஒக்.27

கிளிநொச்சியில் பல்வேறு வழக்குகள் உள்ள நிலையில், கடல் வழியாக தப்பிச்சென்ற இளைஞன் தமிழக கியூ பிரிவு பொலஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு ராமேஸ்வரம் கடல் வழியாக இலங்கையை சேர்ந்த இளைஞர் ஒருவர் தமிழகம் வந்ததார் என தமிழக கியூ பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்து. இந்த தகவலின் பேரில் கியூ பிரிவு பொலிஸார் தீவிரமாக அவரைத் தேடி வந்தனர்.

இந்த நிலையில் திருப்பூர் மாவட்டம், காங்கேயம் பகுதியில் அந்த இளைஞர் தங்கி இருக்கிறார் என ஈரோடு கியூ பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து ஈரோடு கியூ பிரிவு பொலிஸார் காங்கேயம் பகுதியில் அந்த நபரைத் தீவிரமாக வலைவீசி தேடி வந்தனர். அப்போது அந்த நபர் காங்கேயத்தில் உள்ள தனியாருக்குச் சொந்தமான ஒரு நூல் மில்லில் தங்கியிருந்தமை தெரியவந்தது. உடனே அங்கு சென்று அந்த நபரை பிடித்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில், அவர் கிளிநொச்சி உதய நகரை சேர்ந்த வடிவேல் தசிகுமார் (வயது - 36) என்பதும், கடந்த 17 ஆம் திகதி இலங்கையில் இருந்து 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து கடல்வழியாக ராமேஸ்வரம் வந்தார் என்றும் தெரியவந்தது.

மேலும் விசாரணையில், தசிகுமார் காங்கேயத்தில் உள்ள தனியார் நூல் மில்லில் பெயிண்ட் அடிக்கும் வேலையில் ஈடுபட்டு வரும் நண்பருடன் தங்கி இருந்தமையும், அவர் மீது இலங்கையில் பல்வேறு வழக்குகள் இருக்கின்றமையையும் பொலிஸார் கண்டுபிடித்தனர். அதுமட்டுமின்றி பாஸ்போர்ட், விசா போன்ற உரிய ஆவணங்களும் அவரிடம் இல்லை.

இதைத்தொடர்ந்து தசிகுமாரை பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்தமையுடன், அவரிடம் இருந்த இலங்கை தேசிய அடையாள அட்டையையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட தசிகுமாரை காங்கேயம் மாவட்ட நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்தினர். அவரை 15 நாள்கள் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து சென்னையில் உள்ள புழல் சிறையில் அவர் அடைக்கப்பட்டுள்ளார்.

# நாடாளுமன்ற கட்டட தொகுதி மூடப்பட்டது



கொழும்பு, ஒக்.27

கொரோனா அச்சம் காரணமாக நாடாளுமன்ற கட்டடத் தொகுதி மூடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றப் பணியாளர்கள் வீடுகளில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் நாடாளுமன்ற பாதுகாப்புக்காக சேவையில் அமர்த்தப்பட்ட விசேட அதிரடிப்படையின் உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற கட்டடத் தொகுதி முற்றாக கிருமி நீக்கம் செய்யப்படவுள்ளது.

விசேட அதிரடிப்படையின் வீரர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மீண்டும் நாளை நாடாளுமன்றம் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இதேவேளை, கொகுவல, பேலியகொடை, வெதமுல்ல பகுதி முகாம்களைச் சேர்ந்த 9 விசேட அதிரடிப்படையினர் கொரொனா தொற்றிற்கு உள்ளாகியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# மினுவாங்கொடை தொற்றுக்கு உக்ரேனியர்கள்தான் காரணம்!

## புலனாய்வுத்துறை கண்டுபிடித்தது

கொழும்பு, ஒக்ரோபர் 26

இலங்கையில்தற்போதுஏற்பட்டுள்ள கொரோனா இரண்டாவது அலை மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் எப்படி தோற்றம் பெற்றது என்பதைப் புலனாய்வு அதிகாரிகள் கண் டறிந்துள்ளனர் எனப் பரபரப்புத் தகவல் வெளியாகியிருக்கின்றது.

இது குறித்து தெற்கு ஊடகங்களில் இன்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் உருவான கொரோனாத் தொற்றின் மூலம் துருக்கியிருந்து இலங்கைக்கு வந்த உக்ரேனிய விமானக் குழுவினரால் பரவியது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவின் இந்தத் தகவல் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டு, அவர் அதனை பாதுகாப் புச் சபைக்கு சமர்ப்பித்துள்ளார் என அந் தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த செய்தியின்படி, உக்ரேனிய விமா னக் குழுவினர் செப்ரெம்பர் 11 அன்று இலங்கைக்கு வந்தனர். குழுவில் பதினொரு பேர் இருந்தனர். அவர்கள் சீதுவ பகுதியில் உள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில் சுய தனிமைப்படுத்தப்பட்டனர்.

விமானக்குழுவினரை சுயதனிமைப்படுத்த தெரிவு செய்யப்பட்ட ஹோட்டல், தனது ஊழியர்களையும் ஹோட்டலிலேயே சுயதனிமைப்படுத்த வேண்டும்என்றகட்டாயவிதிமுறைக்கு இணங்கி, அந்த ஒப்பந்தத்தில் இணைந்தது.

இந்த குழுவில் உள்ள உக்ரேனியர் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது செப்ரெம்பர் 13ஆம் திகதி உறுதியானது. அவர் ஐ.டி.எச் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதை தொடர்ந்து சுகாதாரத்தரப்பினர் ஏனையவர்களிற்கு தொடர்ந்து பி.சி.ஆர் சோதனை மேற்கொண்டனர். அந்த ஹோட்டலில் 60 ஊழியர்கள் பணியாற்றினார்கள். இதில் சிலர் வீட்டிலிருந்து கடமையாற்றியுள்ளனர். ஊழியர்களும் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற விதிமுறையை மீறி, ஒரு குழுவினரை, ஹோட்டல் நிர்வாகம் வீட்டுக்குச் செல்ல அனுமதித்துள்ளது. அவர்கள் வீட்டிலிருந்து கடமைக்கு வந்துள்ளனர்.

இவ்வாறு தினமும் வீட்டுக்கு சென்று வந்தவர்களில் 5 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூன்று பேர் செப்டம்பர் 11 முதல் 13 ஆம் திகதி வரை ஹோட்டலில் பணிபுரிந்தனர். இதில் ஹோட்டல் பிரதான சமையல்காரர் மற்றும் சலவை அதிகாரி ஆகியோரும் குழுவில் உள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் முதலாம் மற்றும் இரண்டாம் அலைகளில் வைரஸின் தன்மையிலும் வேறுபாடு கண்டறியப்பட்டது.

சீதுவை ஹோட்டல் ஊழியர்களுக்கும், ஆடைத் தொழிற்சாலையிலுள்ள சிலருக்கும் இடையிலான தொடர்பு வைரஸ் பரவக் காரணமாக அமைந்திருக்கலாம்.

உக்ரேனியர்களால் கொரோனா தொற்றிற்கு உள்ளான ஹோட்டல் பணியாளர் ஒருவர் தினமும் சிலாபத்திற்கும் சீதுவைக்குமிடையில் பொதுப்போக்குவரத்தைப் பாவித்துள்ளார்.

பிரண்டிக்ஸ் கொத்தணியின் முதல் நோயாளி செப்ரெம்பர் 21 அன்று அறிகுறிகளை வெளிக்காட்டினார். செப்ரெம்பர் 16 ஆம் திகதிக்குள் அந்தப் பெண் தொற்றிற்கு உள்ளாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. ஒக்ரோபர் 5 ஆம் திகதி, பிராண்டிக்ஸ் கொத்தணியின் முதல் தொற்று ஏற்பட்டது.

வைரஸின் இரண்டாவது அலை முன்பை விட இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

மினுவாங்கொட கொத்தணி, செப்ரெம்பர் 22 ஆம் திகதி விசாகப்பட்டினத்திலிருந்து மத்தள விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் வந்த 48 பேர் கொண்ட பிரண்டிக்ஸ் குழுவினரால் உருவாக்கப்பட்டது என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த குழு விசாகப்பட்டினத்தில் உள்ள பிராண்டிக்ஸ் தொழிற்சாலையில் பணிபுரிந்த இலங்கையர்களாகும். அவர்கள் தெற்கிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தனிமைப் படுத்தப்பட்டமை பின்னர் தெரிய வந்தது.

## மரண வீட்டுக்கு சென்றவருக்கு தொற்று உறுதி

கொழும்பு, ஒக்.26

பதுளை – ஸ்பிரிங்வெளி, மேமலை பகுதியில் மரண வீடொன் றுக்குச் சென்றுவந்த, ஹற்றன் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்த மரண வீட்டில் கலந்துகொண்டவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். ஸ்பிரிங்வெளி, மேமலை தோட்டத்தைச் சேர்ந்த 69 வயது பெண் ணொருவர், உடல்நலக் குறைவு காரணமாக உயிரிழந்துள்ளார்.

அவரது இறுதிக் கிரியையில் ஹற்றன் பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் கலந்துகொண்டுள்ளார். இவர் பேலிய கொடை மீன் சந்தையில் பணியாற்றி வந்துள்ளார். இந்நிலையில் அவருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த நபர், பதுளைக்குச் சென்று வந்தமை தெரிய வந்ததையடுத்து ஹற்றன் பொலிஸார் உடனடியாக இவ்விடயத்தை பதுளை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பதுளை பொலிஸார், ஸ்பிரிங்வெளி பகுதிக்கு சென்று மரண வீட்டுக்கு வந்த அனைவரையும் தனிமைப்படுத்தியுள்ளமையுடன் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## வடமாகாணத்தில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்தத் தீர்மானம்!



யாழ்ப்பாணம், ஒக்.26

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட தனிமைப் படுத்தல் மற்றும் தொற்று நோய் தடுப்பு கட்டளைச் சட்டம் தொடர்பான வர்த்தமானியை வடக்கு மாகாணத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ், பொலிஸாருக்குப் பணித்துள்ளார்.

அதனடிப்படையில் வடக்கு மாகாணத்தில் பொது இடங்களில் சமூக இடைவெளியைப் பேணாதவர்கள், முகக் கவசம் அணியா தோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

வடக்கு மாகாணத்தில் கொரோனா பரவலைக் கட்டுப் படுத்துவது தொடர்பான உயர்மட்டக் கூட்டம் மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இன்று முற்பகல் இடம்பெற்றது.

நாட்டில் கொரோனா தொற்று பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் தொற்று பரவலை கட்டுப் படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை சுகாதார நடைமுறைகள் தொடர்பாக ஆராய்வதற்காக இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட ஐந்து மாவட்ட அரசாங்க அதிபர்கள், பாதுகாப்பு படைகளின் தளபதிகள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மற்றும் அதிகாரிகளுடன் மாகாண கூட்டம் நடந்தது.

வடக்கு மாகாணத்தில் நெடுங்கேணியில் ஏற்பட்ட தொற்று நிலை காரணமாக அவர்களுடன் தொடர்புடையோரை தனிமைப்படுத்த போதுமான இடவசதி இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் வடக்கில் இரண்டு சம்பவங்களால் கொரோனாப் பரவல் அச்சநிலை காணப்படுவதாக அதிகாரிகளால் சுட்டிக் காட்டப்பட்டது.

கொரோனா தொற்று தொடர்பில் தேடப்பட்டவர் மன்னாரில் வந்து நடமா டியமை மற்றும் தென்னிலையில் தனிமைப்படுத்தல் இடங்களிலிருந்து வருகை தந்து தம்மை வெளிப்படுத்தாமல் இருப் போரால் அச்சுறுத்தல் உள்ளது என்று கூறப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று நிலை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத் துவர் த.சத்தியமூர்த்தி சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் வடக்கு மாகாணத் தில் கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நோய் தடுப்புத் தொடர்பான கட்டளைச் சட்டம் தொடர்பான வர்த்தமானியை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு ஆளுநர், பொலிஸாருக்குப் பணித்தார்.

## 130 பேர் குணமடைவு

கொழும்பு, ஒக்.26

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 130 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 3,933 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 92 பேர் நெவில் பெர்னாண்டோ மருத்துவ மனையி இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என் றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள 7,872 பேரில் 9,323 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்தோடு 537 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ள நிலையில் 16 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிரடிப் படையினருக்குக் கொரோனா பல முகாம்கள் தனிமைப்படுத்தப்பட்டன

கொழும்பு, ஒக்.26

களனி, களுபோவில, ராஜகிரிய பகுதிகளில் உள்ள மூன்று விசேட அதிரடிப் படை முகாம்களை அதிகாரிகள் தனிமைப்படுத்தியுள்ளனர்.

பத்துக்கும் மேற்பட்ட விசேட அதிரடிப் படையினர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளமைஉறுதிப்படுத்தப்பட்டுள்ளமையைத் தொடர்ந்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பேலியகொட மீன்சந்தைக்கு மீன் வாங்குவதற்காக சென்றவர் களே இவ்வாறு கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்டுள்ள விசேட அதிரடிப் படையினரில் சிலர் முன்னர் விசேட பிரமுகர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதல் வேளை சிங்கப்பூரில் மைத்திரி பெற்ற சிகிச்சைகளின் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க உத்தரவு

## ஜனாதிபதி ஆணைக்குழு விடுத்தது

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சமயத்தில் சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றமைக்கான மருத்துவ அறிக்கைகளை கையளிக்கும்படி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு உத்தரவை பிறப்பித்தது.

கடந்த 23ஆம் திகதி அவர் ஆணைக்குழுவில் முன்னிலையானபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு 46 நிமிடங்களின் முன்னதாக அரச புலனாய்வுச் சேவை இயக்குநர் நிலந்த ஜெயவர்த்தன, தொலைபேசிவழியாக முன்னாள் ஜனாதிபதியை தொடர்பு கொண்டமை தொலைபேசிப் பகுப்பாய்வு அறிக்கைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாக ஆணைக்குழுவில் வெளிப்படுத்தப்பட்ட பின்னர் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

எனினும், தொலைபேசி உரையாடல் தரவை மைத்திரி மறுத்தார்.

தாக்குதலின் பின்னரே நிலந்த தன்னைத் தொடர்பு கொண்டார் எனவும், இலங்கைக்கும் சிங்கப்பூருக்குமிடையில் இரண்டரை மணித்தியால நேர வித்தியாசமுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"நான்மருத்துவமனையில்இருந்தேன். தேவைப்பட்டால் நான் மருத்துவ அறிக்கைகளை தர முடியும். சம்பவத்தை தொடர்ந்து மருத்துவமனையில் இருந்து ஹோட்டலுக்கு வந்தேன். சம்பவத்தின் தீவிரத்தை உணர்ந்து நான் தொலைபேசியில் ஆலோசனை வழங்கினேன். - என்று அவர் மேலும் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிடம், ஜனாதிபதி சட்டத்தரணி ஷாமில் பெரேரா கேள்வியெழுப்பியபோது - "உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை முதல் தாக்குதல் காலை 8.45 மணிக்கு நடந்தது. காலை 8.58 மணிக்கு இரண்டாவது தாக்குதலுக்கு 23 நிமிடங்கள் முன்னதாக, எஸ்.ஐ.எஸ்.?முன்னாள் இயக்குனர் ஜெயவர்தன ஒரு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டாரா? மேலும் காலை 9.13 மணிக்கு ஜெயவர்தனவுக்கு 184 வினாடி அழைப்பு விடுத்தீர்களா?" - என்றார்.

சம்பவம் அவருக்கு அறிவிக்கப்பட்டபோது, அவர் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் அழைப்புகளுக்கு பதிலளித்தமையுடன், தேவையான ஆலோசனைகளையும் வழங்கினார் என மைத்திரி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி சட்டத்தரணி ஷமில் பெரேரா மீண்டும் கேள்வியெழுப்பினார். "பேஜட் வீதியிலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கும், நிலந்த ஜெயவர்த்தனவிற்குமிடையில் ஜனவரி 1முதல் 2019 ஏப்ரல் 31வரை 221தொலைபேசி அழைப்புக்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் உங்களுக்கும் ஜெயவர்தனவுக்கும் இடையே ஏப்ரல் மாதத்தில் 82 தொலைபேசி உரையாடல்கள் பதிவு செய்யப்படுள்ளன" - என்றார்.

எனினும் மைத்திரி, தொலைபேசி பகுப்பாய்வில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும், பல அழைப்புகள் வந்ததன என எனக்கு நினைவில் இல்லை, நிலந்த எனது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அழைப்பு விடுத்தாரா என்பதும் எனக்குத் தெரியாது.

ஆனால் பல அழைப்புகளுக்கு பதிலளிக்க எனக்கு நேரம் இல்லை - என்று சிறிசேன பதிலளித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து ஜெயவர்தன தொலைபேசியில் தனக்கு அறிவிக்கவில்லை என்றும் சிறிசேன தெரிவித்தார்.



மேலும் சாட்சியமளிக்கும் முன்னாள் ஜனாதிபதி, பயங்கரவாத தாக்குதல்கள் பல துறைகளில் கூட்டு பொறுப்புகளை மீறியதால் ஏற்பட்டது என்று கூறினார்.

2017 ஆம் ஆண்டில், சஹ்ரன் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. காவல் துறையினர் அவரைக் கைது செய்திருக்க வேண்டும், அவரை கைது செய்ய நான் பல சந்தர்ப்பங்களில் உத்தரவு பிறப்பித்திருந்தேன் என்றார் அவர்.

மேலதிக சாட்சியங்களுக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஒக்டோபர் 29 அன்று ஆணைக்குழு முன் ஆஜராக உத்தரவிடப்பட்டது.

# அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை நிலையங்கள் கம்பஹாவில் திங்கள் திறப்பு!

கம்பஹா மாவட்டத்தில் நேற்று (திங்கட்கிழமை) அத்தியாவசிய உணவுப் பொருள்கள், விற்பனை நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மீள் அறிவித்தல் வரையில் தொடர்ந்து அமுலில் இருக்கும் என கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

எனினும் பொதுமக்களுக்கு தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக நேற்று காலை 8 மணி தொடக்கம் இரவு 10 மணி வரையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விற்பனை நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் திறந்திருக்கும் என அந்த மையம் மேலும் தெரிவித்தது.

இதேவேளை கம்பஹா மாவட்டத்தில் அனைத்து அரச மற்றும் தனியார் வங்கிக் கிளைகளும் நேற்று திறந்திருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வங்கிக் கிளைகளை திறப்பதற்கு தேவையான அலுவலர்கள் தமது நிறுவன அடையாள அட்டையைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைக்கு சென்றுவர முடியும் என்று கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் மேலும் தெரிவித்திருந்தது.

# அதிக விலைக்குப் பொருள்கள் விற்பனை பொலிஸார் கடுமையான எச்சரிக்கை விடுப்பு

## பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண

கொழும்பு, ஒக்.27

ஊரடங்கு அமுலாகியுள்ள சில பகுதிகளில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களும் முகக் கவசங்களும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தகவல் கிடைத்துள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சந்தர்ப்பங்களில் அவ்வாறான செயற்படுகளில் ஈடுபடுகின்றமையைத் தவிர்க்குமாறு சம்பந்தப்பட்ட வர்த்தக தரப்பினருக்கு தாம் அறிவுறுத்துவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது தொடர்பாகத் தொடர்ந்து அவதானம் செலுத்தப்படுவதாகவும் இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவித்து அடுத்தக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.



# யாழ். - கிளி. தனியான பஸ் சேவை பல்கலை ஊழியருக்கு விசேடமாக

கிளிநொச்சி, ஒக்.27

நாட்டின் தற்போது எழுந்துள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, பொது மக்களின் பாதுகாப்பு கருதி பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்குத் தனியான பேருந்து சேவை ஒன்று நேற்று மாலை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள விவசாய பீடம், பொறியியல் பீடம், தொழில் நுட்ப பீடம் ஆகியவற்றில் பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பணியாளர்கள் கொரோனாப் பெருந் தொற்றுக் காலத்தில் சன நெரிசலைத் தவிர்க்கும் வகையில் பணிகளுக்குச் சென்று வருவதற்காக இந்தப் பேருந்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக, யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பிரதிப் பதிவாளர் கே. ஞானபாஸ்கரன் அறிவித்துள்ளார்.

தினமும் காலை 7 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து இந்தப் பேருந்து சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், மாலையில் 4.15 மணியளவில் கிளிநொச்சி வளாகத்திலிருந்து யாழ். நோக்கிப் புறப்படவுள்ளது என்றும், இதற்கென 28 ஆசனங்களைக் கொண்ட பேருந்து ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தனது அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளார்.

# கட்சிச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அரவிந்குமாருக்குத் தற்காலிகத் தடை!

மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணி ஆகியவற்றின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமாருக்கு தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

20 ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை தொடர்பாக விளக்கமளிப்பதற்காக அவருக்கு 14 நாள்கள் அவகாசம் வழங்குவதற்கும், அவர் வழங்கும் பதிலின் அடிப்படையில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹற்றனில் நடைபெற்றது. கூட்டம் முடிவடைந்த பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிப்பதென மலையக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியன தீர்மானித்திருந்தன.

இந்நிலையில் இந்த முடிவைமீறி சட்டமூலத்துக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் வாக்களித்தமை தொடர்பில் மத்தியகுழு கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

கொவிட் - 19 தாக்கத்தால் சுமார் 60 பேர் வரையே கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். பதுளை மாவட்ட உறுப்பினர்களை முக்கியமாக அழைத்திருந்தோம்.

அந்தவகையில், இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமாரிடம் விளக்கம் கோருவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. 14 நாள்களுக்குள் அவர் உரிய விளக்கத்தை முன்வைக்கவேண்டும். மத்திய செயற்குழுவின் இந்த முடிவு செயலாளர் ஊடாக அரவிந்தகுமார் எம்.பிக்கு அனுப்பி வைக்கப்படும்.

14 நாள்களுக்கு பின்னர் மத்திய குழுவும், கவுன்ஸிலும் மீண்டும் கூடும். அவர் விளக்கமளித்திருக்கும் பட்சத்தில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அதுவரையில் மலையக மக்கள் முன்னணி, மலையக தொழிலாளர் முன்னணி ஆகியவற்றின் செயற்பாடுகளில் அவர் ஈடுபடக்கூடாது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளுக்கு தனிப்பட்ட நிலைப்பாடுகள் இருக்கலாம். ஆனால் கட்சி, கட்டமைப்பு என வரும்போது கூட்டாக எடுக்கும் முடிவை எடுத்தாக இருக்க வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையை மோதல் களமாக மாற்றுவதற்குப் பலர் முயற்சி!

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர்

கொழும்பு, ஒக். 27

நடு நிலையான வெளிவிவகார கொள் கையிலிருந்து விலக முற்பட்ட ஒவ் வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை தோல் வியை சந்தித்துள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம் பகே தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, இந்தியா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உட்பட உலகின் வலு வான நாடுகளின் செல்வாக்கின் மையத் தில் இலங்கை உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் பல தரப்பினர் தற்போது இலங்கையை மோதல் களமாக மாற்ற விரும்புகின்றனர் என்றும் அதனை நாங் கள் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை ஓர் அணிசேரா நாடாக வும் பக்கச் சார்பற்ற நாடாகவும் ஆதிக்கம் செலுத்துவதற்கான விளையாட்டிலிருந்து விலகியிருக்கவும் விரும்புவதாகத் தெரி வித்துள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர், அந்த பொறியில் தாங்கள் சிக்க விரும்பவில்லை என்றும் கூறினார்.

வெளிவிவகாரக் கொள்கையிலிருந்து இலங்கை விலகிய ஒவ்வொரு தருணமும் தோல்வி அடைந்தமை மட்டுமன்றி, அதன் முன்னேற்றம் குறைவடைந்து உள்நாட்டு மோதல்களில் சிக்குண்டது என்றும் வெளிவிவகார செயலாளர் சுட்டிக் காட்டினார்.

ஒரு நாட்டுக்கு பதில் இன்னொரு நாட டைத் தெரிவுசெய்யும் நிலையில் இலங்கை இல்லை என்றும் வெளிவிவகார அமைச் சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

## களுத்துறையில் 166 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி!

களுத்துறை மாவட்டத்தில் இது வரை 166 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது. களுத்துறை மாவட்ட பொது சுகா தார பரிசோதகர் சமன் கீகனகே இத னைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப் பட்டவர்களில் அதிகமானோர், மத் துகம சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்டவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 130 பேர் குணம டைந்துள்ளனர் என சுகாதார அமைச் சின் தொற்றுநோயியல் பிரிவு அறி வித்துள்ளது. அதன்படி நாட்டில் இது வரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 933 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 92 பேர் நெவில் பெர் னாண்டோ வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

## 8 ஆயிரத்தைக் கடந்தது கொரோனாத் தொற்றாளர்!

நாட்டில் மேலும் 280 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ள நிலையில் மொத்த நோயா- ளர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 152 ஆகப் பதிவாகியுள்ளது.

மினுவாங்கொடை மற்றும் பேலிய கொடை கொரோனா கொத்தணிகளில் 265 பேரும் தனிமைப்படுத்தல் நிலை யங்களில் 15 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொரோனா தொற் றுடன் அடையாளம் காணப்பட்ட வர்களில் 4 ஆயிரத்து 203 பேர் வைத் தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை, தொற் றுடன் அடையாளம் காணப்பட்டோ ரில் மேலும் 130 பேர் நேற்று குணம டைந்து வீடு திரும்பியுள்ளனர். இத னையடுத்து, நாட்டில் குணமடைந்த வர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 933 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## பொம்பியோ வருகைக்கும் எம்.சி.சிக்கும் தொடர்பில்லை

### சேஹான் சேமசிங்க கூறுகிறார்



கொழும்பு, ஒக்.27

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ வின் வருகைக்கும் எம்.சி.சி. ஒப் பந்தத்துக்கும் எவ்வித தொடர் பும் இல்லை என இராஜாங்க அமைச்சர் சேஹான் சேமசிங்க தெரிவித்தார்.

மேலும் எம்.சி.சி. ஒப்பந்தம் தேசிய பாதுகாப்புக்கும் இறை யாண்மைக்கும் பாதிப்பை ஏற்ப டுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள் ளதால், எக்காரணிகளுக்காக வும் இந்த ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் அனைத்து நாடு களுடனும் வெளிவிவகார பொது கொள்கையை கடைப் பிடிக்கும் எனதெரிவித்த சேஹான் சேமசிங்க, எனினும் எந்தத் தரப்பினருக்கும் சிறப்பு சலுகை வழங்கப்படமாட்டாது எனவும் கூறினார்.

ஆசிய நாடுகளுக்கான விஜ யத்தை ஆரம்பித்துள்ள அமெ ரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இன்று இலங் கைக்கு வருகை தரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாழைச்சேனையில் மேலும் 16 பேருக்கு கொரோனா உறுதி

மட்டக்களப்பு, ஒக்.27

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் மேலும் 16 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை பி.சி.ஆர். பரிசோதனையின் ஊடாகக் கண்டறியப்பட் டுள்ளது.

மட்டக்களப்பு - வாழைச்சேனை மீன் பிடித்துறை முகத்துடன் தொடர்புடைய 11 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து துறைமுகம் கடந்த சனிக்கிழமை மூடப்பட்டது.

பேலியகொடை மீன் சந்தைக்கு கிழக்கு மாகாணத்தி லிருந்தும் வழமையாக மீன் கொண்டு செல்லப்படு வதால், மீனவர்களுக்கு எழுமாறாக பி.சி.ஆர். பரிசோ தனை நடத்தப்பட்டது.

இதன்போது, பதினொரு பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோத னையில் மேலும் 16 பேருக்கு கொரோனா தொற்றுள் ளது என்று அறிக்கை கிடைத்துள்ளது என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

மீனவர்களுக்கு தொற்று உறுதியானதை அடுத்து, வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் விசேட கலந்து ரையாடலொன்று நேற்றுமுன்தினம் காலை நடைபெற் றது. சுகாதார அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் உள் ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

## ஓட்டோவில் சூட்சுமமாக மறைத்து கஞ்சா கடத்தும் முயற்சி முறியடிப்பு

### திருமலை — மட்டு. இடையே வாகரையில் சிக்கியது





திருகோணமலை, ஒக்.27

திருகோணமலையில் இருந்து மட் டக்களப்பிற்கு ஓட்டோவில் ஒரு கிலோ கேரளக் கஞ்சாவைக் கடத்தி வந்த இரு வரை வாகரையில் வைத்து வாகரை பொலிஸார் நேற்று திங்கட்கிழமை பகல் கைது செய்துள்ளமையுடன் ஓட்டோ ஒன்றையும் கைப்பற்றினர்.

வாகரை பொலிஸ் புலனாய்வு பிரி வுக்கு கிஷ்டைத்த தகவல் ஒன்றை யடுத்து வாகரை பொலிஸ் பொறுப்பதி காரி எம். என். திசாநாயக்கவின் ஆலோ சனைக்கமைய பொலிஸ் புலனாய்வுத் துறையினர் நேற்று காலையில் இருந்து வாகரை பொலிஸ் நிலையத்துக்கு அரு கில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்

இதன்போது நண்பகல் 12 மணிய ளவில் திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பிரயாணித்த ஓட் டோவை நிறுத்திச் சோதனையிட்ட போது பின்பகுதியிலுள்ள இருக்கையின் பின்னால் பொருத்தப்பட்ட ஸ்பீக்கரின் உள் பகுதியில் ஒளித்து வைக்கப்பட்டி ருந்த ஒரு கிலோ கேரளா கஞ்சாவை மீட்டமையுடன் இருவரைக் கைது செய் தனர். திருகோணமலை சீனக்குடா, மட்டிக்கழி பிரதேசத்தைச் சேர்ந்த 26, 28 வயதுடையவர்கள் எனவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் இவர்களை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக் கப்பட்டது.

## லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் 7 சிறுவர், 3 தாய்மாருக்கு தொற்று

கொழும்பு, ஒக்.26

பொரளையில் உள்ள லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவ மனையில் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறியமுடிகின் றது.

இவ்வாறு கொரோனா தொற் றுக் குள்ளானவர்களில் 07 குழந் தைகள் மற்றும் மூன்று தாய்மார்களும் அடங் குகின்றனர் என சுகாதார அதிகாரி கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு கொரோனா தொற்று உறுதியானவர்கள் பேலிய கொடை மீன் சந்தை கொரோனா தொற்று உறு தியானவர்களுடன் பழகியவர்கள் என் றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று உறுதியாகிய குழந்தைகள் ஐ.டி.எச். வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ‘பட்ஜட்’ நேரம் நாடாளுமன்றில் அரங்கேறப் போகும் ‘பல்டி’கள்

### ஏற்கனவே அணி தாவியவர்களில் இருவருக்கு இராஜாங்க அமைச்சு

எதிரணியைச் சேர்ந்த மேலும் சில எம்.பிக்கள் அரசுடன் இணையவுள்ளனர் எனவும், இதற்கான பேச்சுகள் வெற்றி யளித்துள்ளன எனவும் அரசியல் வட் டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி நாடா ளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இவ்வாறு முன்வைக்கப்படும் ‘பட்ஜட்’ டுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையி லேயே எதிரணி உறுப்பினர்கள், மொட்டு அரசுடன் சங்கமிக்கவுள்ளனர்.

இதில் சிறுபான்மையின நாடாளு மன்ற உறுப்பினர்களும் உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு ஆதர வாக வாக்களித்த 8 எம்.பிக்களில் இருவ ருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த எம்.பியொருவருக்கும், தமிழ் எம்.பியொருவருக்குமே இவ்வாறு இரா ஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட வுள்ளது எனவும் தெரியவருகின்றது.

## பேலியகொடவில் இறால் வாங்கிய வடை வியாபாரிக்குக் கொரோனா!

பொலன்னறுவை மாவட்டத்துக்கு உட்பட்ட பகமுன எனும் பகுதியில் வடை வியாபாரம் செய்து வந்தவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபர், கடந்த சில தினங்களுக்கு முன்னர் இறால் வாங்குவதற்காக பேலியகொட மீன் சந்தைக்குச்சென்றுள்ளார். இதனையடுத்தே அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொலன்னறுவை பகமுன பகுதியை சேர்ந்த 34 வயதுடைய வடை வியாபாரியொருவரே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்நிலையில் அந்த நபருடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## 2019 உயர்தரப் பரீட்சை வெட்டுப்புள்ளி வெளியானது

2019 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகள், இணையத் தளத்தில் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

இதேவேளை இம்முறை 41 ஆயிரத்து 500 பேர் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

மருத்துவபீடம், பொறியியல் பீடம் உள்ளிட்ட சில துறைகளுக்கு இம்முறை அதிக மாணவர்களை இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# விவசாயத்தை மேம்படுத்த மட்டக்களப்பில் நடவடிக்கை!



மட்டக்களப்பு மாவட்டத்தில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள 400 குளங்களைப் புனரமைத்து அதன் மூலம் விவசாய செய்கையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துவருவதாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மகிழடித்தீவில் உள்ள இறால் பண்ணையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பிலான இரண்டாம் கட்ட கூட்டம் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேசசபை தவிசாளர் ,பிரதேசசபை உறுப்பினர்கள், விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மகிழடித்தீவில் உள்ள இறால் பண்ணையை மீள ஆரம்பிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது அதன் மூலம் ஏற்படும் சவால்களைத் தீர்ப்பதற்காக முன்னெடுக்கப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

அத்துடன் மகிழடித்தீவு, முதலைக்குடா, முனைக்காடு பிரதேச மக்களுக்கு இந்த இறால் பண்ணையை மீள இயக்கப்படுவதால்; மக்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகள் தொடர்பாகவும் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது மாவட்ட அபிவிருத்திக்குழுவை கூட்டாமல் இருக்கின்றமை பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனால் கேள்வியெழுப்பப்பட்டது. இலங்கையின் அனைத்து மாவட்ட அபிவிருத்திக்குழுவும் கூட்டப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பில் மட்டும் கூட்டப்படாமல் இருப்பது தொடர்பாகவும் கேள்வியெழுப்பப்பட்டது.

மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவர் சிறையில் இருப்பதால் கூட்டத்தை பிற்போடமுடியாது எனவும் இருப்பவர்களைக்கொண்டு அபிவிருத்திக்குழு கூட்டத்தை மீள ஆரம்பிக்கவேண்டும் என இங்கு சாணக்கியனால் கோரப்பட்டது.

இதனை தொடர்ந்து மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தை கூட்ட நடவடிக்கையெடுப்பதாக அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

## இலங்கைக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனப்பான்மை தோல்வியடையும் என்றும், இது மற்ற நாடுகளில் தன்னிச்சையாகத் தலையிடும் அமெரிக்க நடைமுறையை முழுமையாக அம்பலப்படுத்தியுள்ளது என்றும் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கைகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நாடுகளை பக்கங்களைத் தேர்வு செய்ய கட்டாயப்படுத்துகிறது என்றும் தெரிவித்திருந்தர்.

உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடக விசாரணைகளில், தூதரகம் மேலும் பின்வருமாறு கூறுகிறது: –

1).சீனா மற்றும் இலங்கை மக்கள் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளாக நட்பு பரிமாற்றங்களின் வரலாற்றைக் கொண்டுள்ளனர். ஒருவருக்கொருவர் உறவுகளைக் கையாள எங்களுக்கு போதுமான ஞானம் உள்ளது. மேலும் ஆணையிட மூன்றாம் தரப்பு தேவையில்லை. 1950களில் இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கு முன்பே, நாங்கள் அமெரிக்க முற்றுகை மற்றும் பொருளாதாரத் தடைகளை மீறி, வரலாற்று ரப்பர்–அரிசி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம். இன்று 21 ஆம் நூற்றாண்டில், எந்த வொரு வெளி சக்திகளின் வற்புறுத்தலுக்கும் இரு நாடுகளும் அடிபணிவது சாத்தியமில்லை. இலங்கை மக்களின் நேர்மையான நண்பராக, தீவு மற்ற நாடுகளுடன் ஆரோக்கியமான உறவை வளர்ப்பதைக் கண்டு சீனா மகிழ்ச்சியடைகிறது. எவ்வாறாயினும், சீனா – இலங்கை உறவுகளை விதைப்பதற்கும் தலையிடுவதற்கும் மற்றும் இலங்கையை வற்புறுத்துவதற்கும் கொடுமைப்படுத்துவதற்கும் வெளியுறவுத்துறை செயலாளரின் வருகையை அமெரிக்கா பெறுவதை நாங்கள் உறுதியாக எதிர்க்கிறோம். அமெரிக்கா சர்வதேச சமூகத்தின் நியாயமான அழைப்புகளை எதிர்கொள்ளும், சீனா –இலங்கை உறவுகளின் பிரபலமான தளத்தை எதிர்கொள்ளும். இலங்கை மக்களின் உண்மையான தேவைகளை எதிர்கொள்ளும். 'கடினமான ஆனால் தேவையான முடிவுகளை எடுக்கும்' என்று நம்பப்படுகிறது. 'மற்றும் பிற நாடுகளின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவகாரங்களில் தன்னிச்சையாக தலையிடுவதற்கான அசிங்கமான நடைமுறைகளை சரிசெய்யும்.

2)அதே நேரத்தில், உண்மையான நண்பர்கள் தங்களை மறுபக்கத்திலுள்ளவர்களின் நிலைநின்று நோக்க வேண்டும் என்று நாங்கள் அமெரிக்காவிற்கு உண்மையாக அறிவுறுத்துகிறோம். தற்போது, கொரோனா வெடித்ததிலிருந்து இலங்கை மிகக் கடுமையான சவாலை எதிர்கொள்கிறது. மேலும் உள்ளூர் சுகாதார அமைப்பு இனி இறக்குமதி செய்யப்படும் எந்த ஆபத்துகளையும் தாங்க முடியாது. அமெரிக்கா அதன் சொந்த உறுதிப்படுத்தப்பட்ட தொற்றுக்கள் 8.8 மில்லியனை எட்டியதும், இறப்பு எண்ணிக்கை 230 ஆயிரத்தை தாண்டியதும் ஒரு பெரிய தூதுக்குழுவையும் முன் கூட்டிய குழுவையும் இலங்கைக்கு அனுப்பியுள்ளது. மேலும் வருகைக்காகவும் வெளிவரும் சாலைக் கட்டுமானத்திற்காகவும் பல்வேறு கோரிக்கைகளை விடுத்துள்ளது. பொது மக்கள் தொடர்ந்து கேள்வி எழுப்புகிறார்கள். இந்த அணுகுமுறை நாடு மீதான உங்கள் மரியாதையை உண்மையிலேயே நிரூபிக்கிறதா? உள்ளூர் தொற்றுநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கு இது உதவுமா? இது இலங்கை மக்களின் நலன்களுக்காகவா?

03).சமீபத்தில், ஒரு உயர்மட்ட சீனக் குழுவும் இலங்கைக்கு விஜயம் செய்தது. இலங்கையின் தொற்றுநோய்க்கு எதிரான போராட்டம் மற்றும் பொருளாதார புத்துயிர் பெறுவதற்கு தேவையான உதவிகளையும் ஆதரவையும் கொண்டு வந்தது. மேலும், தொற்றுநோய் ஏற்கனவே சீனாவில் திறம்பட கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், அபாயங்களைக் குறைப்பதற்கும், புரவலன் நாட்டை மதிப்பதற்கும், சீனக் குழு அதன் செயற்பாடுகளையும் பணியாளர்களையும் முடிந்தவரை குறைத்து, இலங்கையின் தொற்றுநோய் தடுப்பு வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து, உறுதியாகத் தவிர்த்து புரவலன் நாட்டிற்கு ஏதேனும் சிக்கல் வருவதைத் தவிர்த்திருந்தோம் . இராஜாங்க செயலாளரின் வருகைக்காகவும் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நாடுகளுடனான உறவுகளை கையாளுவதற்காகவும் சில குறிப்புகளை வழங்குவோம் என்று நம்புகிறோம். இந்த நடைமுறைகளை அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்ள நாங்கள் தயாராக இருக்கின்றோம் – எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்புப் பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை கொரோனாப் பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இந்த இராணுவ விசேட மோட்டார் சைக்கிள் படையின் 2 குழுவினர் கொழும்பு மாநகர எல்லைக்குள்ளும், 3 குழுவினர் கிராண்ட்பாஸ் பிரதேசத்திலும் உடல் வெப்பநிலையைப் பரிசோதிக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சிக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கியுள்ளார் ஜீவன் தொண்டமான்!



கிளிநொச்சி, ஒக்.27

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 15 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் கரைச்சி பிரதேச செயலாளர் பி.ஜெயகரன் தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், அமைச்சரின் வடக்கு மாகாண இணைப்பாளர் பாரதிதாசன், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தலைவர் அங்கஜன் இராமநாதனின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் நந்தகுமார், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைப்பாளர் வை.தவநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## விமானப்படைத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகமட் ஏ ஜவாட், நெதர்லாந்துக்கான தூது வராக அருணி ரணராஜா, சுவீடனுக் கான தூதுவராக தர்ண பெரேரா, எகிப்துக் கான தூதுவராக பத்மநாதன், போலந்துக்கான தூதுவராக சமரசிங்க, தாய்லாந்துக்கான தூதுவராக சமிந்த கொலன்னே, கட்டாருக்கான தூதுவராக மபாஸ் மொஹிதீன் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

உயர் பதவிகளுக்கான நியமனங்கள் குறித்த நாடாளுமன்றக் குழுவுக்குப் பரிந் துரைக்கப்பட்டுள்ள இந்தப் பெயர்கள், அங்கீகரிக்கப்பட்ட பின்னர், நியமனங்கள் உறுதி செய்யப்படும்.

## முழு நாட்டையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படுகின்றது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: –

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பிரதேச மட்டத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை ஏன் முழு நாட்டுக்கும் பிறப்பிக்கக் கூடாது என எதிர்த்தரப்பினர் கேள்வியெழுப்புகின்றார்கள்.

முழு நாட்டுக்கும் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பிப்பதால் எவருக்கும் நன்மை கிடையாது. முழு நாட்டையும் முடக்க வேண்டிய தேவை ஏதும் தற்போது கிடையாது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறான நிலையில் மீண்டும் முழு நாட்டையும் முடக்கினால் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படும் – என்றார்.

# மரண தண்டனைக் குற்றவாளி துமிந்தவை பொதுமன்னிப்பு வழங்க மனோ ஒப்பமிட்டார்!



கொழும்பு, ஒக். 27

மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவை பொது மன்னிப்பில் விடுவிக்கும் மனுவில் தான் கையொப்பமிட்டார் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உறுதிப் படுத்தியுள்ளார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வரை சுட்டுக்கொலை செய்த குற்றத்துக்காக துமிந்த சில்வா உள்ளிட்ட குற்றவாளிகளுக்கு 2016 செப்ரெம்பர் 8 ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் அரச தரப்பு உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கத் தீர்மானித்திருந்த குறித்த மனுவில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் அந்தக் கட்சியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும் கையொப்பமிட்டுள்ளனர்.

ஒக்ரோபர் 20 ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட இந்த மனு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் செல்லும் போது, துமிந்த சில்வாவின் விடுதலையானது உறுதிப்படுத்தப்படும் என்றும் ஆங்கில ஊடகம் கடந்த வாரம் அறிக்கையிட்டிருந்தது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள மனோ கணேசன், துமிந்த சில்வாவை போன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், குற்றச்சாட்டுக்கள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் அவர்களின் வாழ்க்கையில் பெரும்பாலான காலத்தை சிறையில் செலவிட்டுள்ளனர் எனக் கூறினார்.

ஆகவே, அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு அவர்களின் குடும்பங்களுடன் வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் இதுபோன்ற மனுவில் தாங்கள் கையெழுத்திடவில்லை என அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் கெஹலிய ரம்புக்வெல, மஹிந்த அமரவீர, விதுர விக்ரமநாயக்க மற்றும் விமலவீர திசா நாயக்க மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பி.சி.ஆர். பரிசோதனையில் கற்பிட்டி நபர் மரணமடைந்தமை கொரோனாவால் அல்ல!

## திடீர் மரண விசாரணை அதிகாரி சான்று

கற்பிட்டி மரணம் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்டதல்ல என புத்தளம் மற்றும் கற்பிட்டி பிரதேசத்துக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.எம்.ஹிசாம் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி, பீ.சி.ஆர். பரிசோதனையின்போது மரணமடைந்த 32 வயது நபர், கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்திருக்கலாமென சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.எம்.ஹிசாம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த மரணம் கொரோனாவால் ஏற்பட்ட மரணம் என வதந்திகளை பரப்பி மக்கள் மத்தியில் சிலர் அச்சத்தை தோற்றுவித்துள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் கொரோனா தொற்று தொடர்பாக போலியான தகவல்களைப் பரப்பி சமூகத்தில் பதற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் எவரும் ஈடுபட வேண்டாம் என பீ.எம். ஹிசாம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பேலியகொட மீன் சந்தை கொத்தணியால் இதுவரையில் 1,545 பேருக்குத் தொற்று!

பேலியகொட மத்திய மீன் சந்தை கொத்தணியில் இருந்து இதுவரை 1,545 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொரோனா தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 799 பேர் பேலியகொட மீன் சந்தையில் பணியாற்றிய ஊழியர்கள் என்றும் 746 பேர் கொரோனா தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்கள் என்றும் கொரோனாத் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், பேருவளை, காலி, தெவிநுவர , அம்பந்தோட்டை மற்றும் வாழைச்சேனை மீன்பிடிதுறை முகங்களில் இருந்து இதுவரை கொரோனா தொற்றாளர்கள் 44 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பேருவளை மீன்பிடி துறைமுகத்தில் 20 பேர், வாழைச் சேனை மீன்பிடி துறைமுகத்தில் 14 பேர், காலி மீன்பிடி துறைமுகத்தில் 5 பேர், தெவிநுவர மீன்பிடி துறை முகத் தில் 3 பேர் மற்றும் அம்பாந்தோட்டை மீன்பிடி துறை முகத்தில் 2 பேர் என கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தேசிய மத்திய நிலையம் நேற்றுக் காலை தெரிவித்துள்ளது.

# சரியான நேரத்தில்; நடவடிக்கை எடுக்க தவறின் விளைவு பாரதூரமாக அமையும்!

## எச்சரிக்கிறது அரச மருத்துவர் சங்கம்

கொழும்பு, ஒக். 27

கொரோனா தொற்று தொடர்பாக உரிய அதிகாரிகள் சரியான நேரத்தில் முடிவுகளை எடுக்காவிட்டால் நாடு கடுமையான விளைவுகளைச் சந்திக்கும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வைரஸ் அபாயத்தில் உள்ள மாவட்டங்கள் தொடர்பாக அதிகாரிகள் இன்னும் முடிவுகளை எடுக்கவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதம செயலாளர், வைத்தியர் ஹரித அளுத்கே சுட்டிக்காட்டினார்.

அத்தோடு அதிகாரிகள் எடுக்கும் சில முடிவுகள் மக்களுக்குத் தவறான சமிக்ஞைகளைக் காட்டுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கொரோனாத் தொற்றின்



இரண்டாவது அலையின் ஒரு பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ள பேருவாலை மற்றும் களுத்துறை பகுதிகளில் ஊரடங்கு உத்தரவைத் தளர்த்தும் நடவடிக்கை தொடர்பாகவும் வைத்தியர் ஹரித அளுத்கே அதிருப்தி வெளியிட்டார்.

# கொரோனா நோயாளியின் குடும்பத்தினர் இனி வீட்டிலேயே தனிமைப்படுத்தப்படுவர்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 27

கொரோனா தொற்று உறுதியான நோயாளி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களை அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்த நேற்று முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, இன்று முதல் அவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படமாட்டார்கள் என்றும் கூறினார்.

மேலும் கொரோனாத் தொற்று உறுதியவர்களின் குடும்ப உறுப்பினர்கள் இந்தக் காலகட்டத்தில் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையைக் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அத்தோடு அவர்களுக்குத் தொற்று உள்ளதா எனக் கண்டறிய மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். சோதனை முடிவு கிடைக்கும் வரை அவர்கள் வீட்டுக் குள்ளேயே இருக்க அறிவுறுத்தப்படுவார்கள் என்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா குறிப்பிட்டார்.

முதியவர்கள் மற்றும் அவர்கள் வளர்க்கும் செல்லப்பிராணிகள் காரணமாக பலர் வீடுகளை விட்டு வெளியேறுவதில் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள் என்றும் இதனைக் கருத்திற்கொண்டு நோயாளிகளின் குடும்ப உறுப்பினர்களை வீட்டில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் விசா
இன்னும் 10 நாட்களே உள்ளது
2022ல் நீங்களும் அமெரிக்காவில்...
எந்தவித எதிர்பார்ப்புக்களும் இல்லாமல் V2 Travels ல் பதிந்தோம் இன்று அமெரிக்காவில் வாழ்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தை உருவாக்கித்தந்த V2 Travels க்கு எமது நன்றிகள்
0768226244
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி 05-11-2020
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237
மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960
V2 Travels www.facebook.com/v2tandt

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை
மணமகன் விவரம்
பிறந்த திகதி – 1989.12.04
மதம் – இந்து
நட்சத்திரம் – உத்திரட்டாதி
பாவம் – 29
செவ்வாய் – 8 இல் 8 புள்ளி
கல்வி – கணனி, UK கல்வி
தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – படித்த அழகான பெண் தேவை.
மணமகள் விவரம்
பிறந்த திகதி – 1996.10.20
மதம் – இந்து V
நட்சத்திரம் – திருவோணம்
பாவம் – 47 1/4
செவ்வாய் – 4 இல் 8 புள்ளி
கல்வி – AL
எதிர்பார்ப்பு – கனடா, UK அல்லது அரச உத்தியோகம் தேவை
Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300
உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
•பிரான்ஸ் •ஜெர்மனி •டென்மார்க் •நெதர்லாந்து •இத்தாலி •சுவிஸ்
1150/= Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
0768226240

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.10.2020 இல் வெளியிடப்பெற்றது.